# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 13 புதன்கிழமை (27-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:213


# அரசைக் கவிழ்க்கும் ஐ.தே.க. முயற்சியை முறியடிப்பது குறித்து மந்திராலோசனை!

## சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி திங்கள் இரவு நீண்ட நேரம் ஆராய்வு

கொழும்பு,ஜூன்27

**அரசைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான வழிமுறைகள் குறித்து தனது சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் இரவு நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தினார்**

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜயரத்ன உட்பட பதினைந்து சிரேஷ்ட அமைச்சர்கள் இந்த மந்திராலோசனையில் பங்குபற்றினர்.

ஐ.தே.கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகளால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் ஆகியவை குறித்து அங்கு விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைகளின் முடி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஐக்கிய முன்னணிக் கூட்டத்தை கூட்டும் அதிகாரம் பேரியலுக்கு இல்லை

### ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்27

தேசிய ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றை இன்று கொழும்பில் நடத்துவதற்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப் அழைப்பு விடுத்துள்ள அதே வேளை -

இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

கிழக்கிலிருந்து முந்நூறுக்கு மேற்பட்ட ஆதரவாளர்களை கொழும்புக்கு அழைத்து வந்து தேசிய ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றை இன்று நடத்துவற்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப் ஏற்பாடு செய்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் கூட்டத்தை கூட்டுவதற்கு பேரியல் அஷ்ரப்புக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்து கடிதம் ஒன்றை ரவூப் ஹக்கீம் அவருக்கு அனுப்பியுள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் யாப்பின் 9 (அ) பிரிவின் பிரகாரம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சி அதிருப்திக் குழுவுடன் பிரதமர் தனித்தனியாகப் பேச்சு

கொழும்பு,ஜூன்27

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அதிருப்திக் குழு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்று இரகசியமாகப பேச்சு நடத்தியுள்ளார்.

தனித்தனியாக அவர்களைச் சந்தித்த பிரதமர் அந்த உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதியுடன் தாம் பேசுவதாக அவர்களுக்குப் பிரதமர் உறுதிமொழி வழங்கினார்.

அதிருப்திக் குழுவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.கவில் சேரலாம் என்று வெளியான தகவல்களை அடுத்தே பிரதமர் அவர்களைச் சந்தித்துள்ளார்.

(க-3)

## அரியாலையில் களப்பலி

வவுனியா,ஜூன்27

அரியாலைக் கடற் பிரதேசத்தில் கடந்த 23ஆம் திகதி கடற்படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் லெப்டினன்ட் தமிழ்வேந்தன் (செல்வராசா கார்த்திக் - யாழ்ப்பாணம்) களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு பதிலடியாகவே மட்டுவிலில் தாங்கள் கிளைமோர் தாக்குதல் நடத்தியதாக புலிகள் அறிவித்திருந்தது தெரிந்ததே.

(க-3)

## மோட்டார் சைக்கிள் படை அணியினர்

## யாழ்.நகர வீதிகள், ஒழுங்கைகளில் திடீர், திடீரெனச் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.நகரப் பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் மோட்டார் சைக்கிள்களில் வரும் இராணுவத்தினர் சந்தேகத்துக்குரியவர்களைச் சுற்றிவளைத்து மறித்துச் சோதனை செய்து வருகின்றனர்.

நேற்று நகரின் பல பகுதிகளிலும் படையினரின் இந்தச் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

படையினரின் இந்தப் புதிய நடவடிக்கை காரணமாக இளைஞர்கள் வீதிகளில் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர்.

(க-5)

## 3 பொலீஸாருக்கும் விளக்கமறியல்

கொழும்பு,ஜூன்27

மருதானை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சோதனை நிலையத்துக்குள் இழுத்துச் சென்று தமிழ்ப் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுளள மூன்று பொலீஸாரையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி மாளிகாவத்தை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் பிரஸ்தாபப் பெண், பொலீஸாரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு விரைவில் இடம்பெறவுள்ளது.

(க-3-5)

## பூநகரிக் கரையில் புலிகளிடம் 3 சடலங்கள் நேற்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

திருநெல்வேலி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த மூன்று சடலங்களும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் பூநகரிக் கரையில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து இந்தச் சடலங்களைப் பொறுப்பேற்ற இராணுவத்தினர், அவற்றை குருநகர் இறங்குதுறையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளிடம் கையளித்தனர்.

சடலங்களைப் பொறுப்பேற்ற மேற்படி குழுவின் பிரதிநிதிகள் அவற்றை யாழ்.கடவேரி ஊடாக படகுகளில் எடுத்துச் சென்று பூநகரியில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

(க-5-10-15-139-173)

## வவுனியா பிரபல கல்லூரியின் 3 மாணவிகளைக் காணவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

வவுனியா,ஜூன்27

வவுனியாவில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் கல்வி பயிலும் மூன்று மாணவிகளை நேற்றுமுன்தினம் முதல் காணவில்லை என்று அவர்களது உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழு வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சகோதரிகளான கிருஷ்ணபிள்ளை டிலீஸா (வயது 12), கிருபாலினி (வயது 14) மற்றும் ஜெயகாந்தன் தர்ஷிகா (வயது 12) ஆகியோரையே காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்ற இவர்கள் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் தமிழ்க்குழு ஒன்றின் முகாமில் பயிற்சிக்காகத் தடுத்து வைக்கப்பட்ட சிறுமி ஒருவர் மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து காணாமற் போயுள்ள இந்தச் சிறுமிகள் குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3-9)

## தெற்கு நிலைமையைச் சாதகமாக்கி புலிகள் தாக்குதல் நடத்தத் திட்டம்

கொழும்பு,ஜூன்27

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை காரணமாக தெற்கில் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலையைப் பயன்படுத்தி -

விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பில் அரச சார்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியையும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியையும் இணைக்கும் பிரமணாளங்குளம் ஊடான போக்குவரத்தை கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகள் தடை செய்திருந்தனர் என்றும் -

தமது இராணுவத் தயாரிப்புகள் தொடர்பான இரகசியங்கள் வெளியில் அம்பலமாகாமல் இருப்பதற்காகவே இந்தத் தடை போடப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன என்றும் -

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(க-3)

## சந்திரிகா - ரணில் சந்திப்பை அடுத்து

## புலிகளின் தடைநீக்கம் குறித்து எழுந்துள்ள புதிய சர்ச்சை!

கொழும்பு,ஜூன்27

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுக்களின் போது -

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றிப் பேசியது தொடர்பாக முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பேச்சுக்களின் போது, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவை தம்முடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும் என்று ஜனாதிபதி ஆலோசனை கூறியதாக கொழும்பில் இருந்து வெளிவரும் 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை உட்பட வேறு சில ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்தியை மறுத்து ஜனாதிபதி செயலகம் நேற்றுப் பிற்பகல் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து இணக்கம் எதையும் ஜனாதிபதியோ அரசோ ஐ.தே.கட்சியிடம் தெரிவிக்கவில்லை என்றும் -

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று ரணில்தான் ஜனாதிபதியிடம் யோசனை தெரிவித்திருந்தார் என்றும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

## வடபகுதிச் சிறைகளில் உள்ள

## இந்திய மீனவர்களின் உறவினர் தற்கொலை எச்சரிக்கை விடுப்பு

சென்னை,ஜூன்27

ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வடக்கில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 60 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். இன்றேல் தற்கொலை செய்யப் போகிறோம்.

மேற்கண்டவாறு அவர்களது உறவினர்கள் தமிழக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வடபகுதிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமது உறவினர்கள் விடுவிக்கப்படாவிட்டால் பொருளாதாரம் சீர்குலைந்து வாழ்க்கையை நடத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

(க-3-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வாசகர் திருமுகம்

## நிரந்தர நியமனம் கிடைக்குமா?

1994-12-31ஆம் திகதி நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 53 பேர் பயிலுநர் ஆசிரியர்களாக 01-01-1996 முதல் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

இவர்களது நியமனக் கடிதத்தில் 4 வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்பவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்புகளின் ஒழுங்குகளுக்கேற்ப நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 01-01-2000ஆம் ஆண்டில் 4 வருடசேவை முடிவடைந்து விட்டது. எனவே இவர்கள் ஆசிரியர் சேவை 3-II இனுள் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால் 18 மாதங்கள் கழியும் நிலையில்கூட இவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அத்துடன் இவர்களில் சிலர் பட்டம் பெற்றுள்ளனர். சிலர் ஆசிரியர் பயிற்சியை முடித்துள்ளார்கள். எனவே இவர்கள் ஆசிரிய சேவை 3-I இனுள் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால் அதுவும் இதுவரை செய்யப்படவில்லை.

இவர்களுக்கான தற்போதைய பணிக்கொடை ரூபா3500/= மட்டுமே. இன்றைய காலகட்டத்தில் குடும்பச் செலவுக்கு இத்தொகை "ஒரு மூக்குப்பொடிக்குக் கூடக் காணாது" என்பதை யாவரும் விளங்கிக் கொள்ளவர். எனவே இந்த ஆசிரியர்களை ஆசிரியர் சேவை 3-IIஇற்கோ அல்லது அவர்களின் தகுதிக்கேற்ப 3-I இற்கோ உள்வாங்கும்படியும், அவர்களின் கஷ்ட நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்கும்படியும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைத் தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*சண்டிலிப்பாய்* - **பாதிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்.**

## சிந்து நடைக்கூத்துப் பிரிவில் தென்மோடி முறைமை கலக்கலாமா?

இவ்வாண்டிற்கான மாவட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில் நாட்டுக்கூத்துப் பிரிவிற்கான போட்டி யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் 16.06.2001 அன்று நடைபெற்றது.

இந்தப் போட்டிகள் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமையவே நடைபெறவேண்டும் என்பது மிகவும் முக்கியமான விதியாகும். சுற்றுநிருபத்தில் நாட்டுக்கூத்துப் பிரிவில் ஐந்து வகையான கூத்து வடிவங்கள் இடம்பெற்றிருந்தன. அவையாவன வடமோடி, தென்மோடி, சிந்து நடை, இசை நாடகம், விசேட கூத்து.

ஆனால் சிந்துநடைப் பிரிவிற்குள் முதலாம் இடம் என அறிவிக்கப்பட்ட கூத்து தென்மோடி ஆட்ட முறைமைகளை முழுமையாகக் கொண்டிருந்தது. இத்துறைசார்ந்த வல்லுநர்கள்கூட இக்குறைபாட்டை அவ்விடத்தில் சூசமாகத் தெரிவித்தபோதிலும் முடிவு தலைகீழாகவே அமைந்திருந்தது.

மேற்படி பிரிவுகள் காணப்பட்ட போதிலும் தென்மோடி ஆட்டமுறைமை கலந்த கூத்தினை எவ்வாறு சிந்து நடைக்கூத்துப் பிரிவிற்குள் அடக்கி முதலாம் இடம் வழங்கமுடியும்? துறைசார்ந்த வல்லுநர்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக இதற்குப் பதில் தருவார்களா?

*யாழ்ப்பாணம்.* - **பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்.**



கப்புதூ - அந்தணன்திடல் கிராமத்தில் எட்டு இலட்சம் ரூபா செலவில் பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை அண்மையில் பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் அம்மையார் ஆரம்பித்துவைத்தார்.

தூதுவரை கப்புதூ ஏகம்பர வித்தியாலய மாணவி ஒருவர் மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்தில் காணலாம்.

பிரிட்டிஷ் தூதுவர் குழாயைத் திறந்து குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்துவைப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

இத்திட்டத்துக்கான தண்ணீரைப்பெறத் தனது கிணற்றை வழங்கி உதவிய கரணவாய் எஸ்.தாமோதரம்பிள்ளை, கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

*(படங்கள்: வடமராட்சிப் பிரதேச செய்தியாளர்.)*

# பக்தர்கள் சிரமங்கள் ஏதுமின்றி நயினாதீவுக்குச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்27

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்கள் எதுவித சிரமமும் இன்றி பஸ்களில் பயணம் செய்ய பாதுகாப்பு ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினை செல்லும் பக்தர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பாக கடந்த 23ஆம் திகதிய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

ஈ.பி.டி.பி. தூதுக்குழு ஒன்று இது குறித்து தீவகப் படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பக்தர்கள் தற்போது யாழ்.துரையப்பா ஸ்ரேடியத்தில் சோதனை நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு விசேட பஸ்கள் மூலம் குறிகாட்டுவான் இறங்குதுறை வரை அழைத்துச் செல்லப்படுவர் என்றும் -

இந்த பஸ் சேவைக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் -

ஈ.பி.டி.பி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளருமான ந.மதனராசா, வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் இந்து சமய விவகாரப் பொறுப்பாளருமான என்.திரிலோகநாதன், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நெப்போலியன் ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவே வடபிராந்திய உதவிக் கடற்படைத் தளபதி என்ஜீ.பி. தென்னக்கோன் மற்றும் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## செயலமர்வு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடனான அதிபர்கள், கோட்ட அலுவலர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை முதல் ஐந்து வலயங்களிலும் இடம்பெறவுள்ளது.

இந்த செயலமர்வை மேற்பார்வை செய்து வழிநடத்துவதற்காக திருமலையில் இருந்து இந்தப் பணிக்குப் பொறுப்பான செயற்திட்ட அலுவலர்களான வே.உமாமகேஸ்வரன், திருமதி சி.நடராசா ஆகியோர் நேற்று இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இந்தச் செயலமர்வை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை மேற்கொண்டுள்ளார். (க-3)

## இடையில் தடைப்பட்ட மாநகர சபையின் சுகாதாரக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் சுகாதாரக் குழுக் கூட்டம் இடையே நிறுத்தப்பட்டது.

சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் நலன் பேணப்படுவது தொடர்பாக குழுவின் உறுப்பினர் ம.மங்களநேசன் பிரேரணைகளைக் கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணையை சுகாதாரக் குழுவின் தலைவர் செல்லையா விஜயரட்ணம் ஏற்க முடியாதென்று மறுப்புத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து குழுத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்குமிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றதனால் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (க-5)


உ

ஓம் கணபதி துணை



## புளியங்கூடல்

## இந்தன் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மாஹாகும்பாபிஷேகமும் குரு வழிபாடும்

'கிரியாகலாப முக்தாமணி'

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**



புகழ் பூத்த புளியங்கூடல் இந்தன் பிள்ளையாரின் கோவிற் பிரதிஷ்டா பிரதம குருவாய் இன்று சர்வதேச இந்துமத குருபீடத்தின் அதிபதியாய் உயர்ந்து முதன்முதலாக இந்தப் பெருவிழாவை நடத்திவைப்பதற்கு எல்லாம்வல்ல விக்கினங்களை வேரறத்து வைக்கும் இந்தன் முத்துவிநாயகரை வேண்டி பாதார கமலங்களில் சரணடைகின்றோம்.

*புனராவர்த்தனம் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம்:-*
*02-07-2001 (திங்கட்கிழமை)*

*கர்மாரம்பம் விநாயக வழிபாடு, கணபதி ஓமம், தனபூசை:-*
*27-06-2001 (காலை 10.17 - 11.38 வரை)*

*28-06-2001 நவக்கிரக மகம், புண்ணிய வாசனம், திசா கோமம், இரக்ஷோகண கோமம் வாஸ்து சாந்தி*

30-06-2001 சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல்
01-07-2001 வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

குறிப்பு:- *02-07-2001 காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரையிலான கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையில் நேரடி வர்ணனை செய்து தரப்படும். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும் இவ்வசதி (நேரடி அஞ்சல்) செய்யப்பட்டுள்ளது.*

**இந்தன் முத்துவிநாயகராலய பரிபால சபையினர்**

(சி17240)




# அழைப்பு

**அரச சேவையில் கடமை புரியும் கீழ் உழைப்பு பட்டதாரிகள் 29-06-2001 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கௌரவ அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்திக்க இருக்கின்றனர். இந்தச் சந்திப்பில் பங்குபற்ற வசதியாக சகல கீழ் உழைப்பு பட்டதாரிகளையும் புனர்வாழ்வு அமைச்சுக்கு தவறாது வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

அரச சேவை கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம். - *செயலாளர்.*

(சி17241)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 27 - 12 - 1924 | 28 - 05 - 2001 |

கொழும்புத்துறையூர்

## தம்பிப்பிள்ளை இராசையா

*திதி : 27.06.2001*

**கொழும்புத்துறையின் தந்தையே!**
**புகழ்பூத்த பூரணனே!**
**வந்தகடன் முடித்துவிட்டு**
**வானுலகம் சென்றனையோ?**
**எங்கு ஐயா உமைக் காண்போம்?**
**ஏங்குகின்றோம் நாங்கள் இங்கு!**
**வந்து எம்மைப் பாராயோ?**
**வண்ணமுகம் காட்டாயோ?**

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:
*27, 3 ஆம் குறுக்குத்தெரு,*
*கொழும்புத்துறை.*

தற்காலிக முகவரி:
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

(89480)

## உதயன்

### எச்சரிக்கை மணி

இன்று மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் சீரழிந்து வருகின்றன. இது எதிர்கால சந்ததிக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. இந்நிலை நீடிக்குமானால் எதிர்காலத்தில் பாரதூரமான - பயங்கர - விளைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டிய அவலநிலை ஏற்படும்.

- இப்படி எச்சரிக்கை மணி அடித்திருக்கின்றார் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறைத் தலைவர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிகவும் ஆபத்தான - விரைந்து, உடன் தீர்வு காணப்பட வேண்டிய - தலைபோகின்ற பிரச்சினை இது.

யாழ்ப்பாணத்துக்கே உரிய சமூக விழுமியங்கள், கடப்பாடுகள் - கட்டுப்பாடுகள், பொறுப்புகள் - கடமைகள் போன்றவற்றைத் துறந்து, தறிகெட்டு அலையும் ஒரு புதிய - சீரழிந்த - சமுதாயம் உருவாகும் ஏதுநிலை ஏற்பட்டிருப்பது கண்டு குடாநாட்டுப் பெரியோர்கள் அஞ்சும் நிலைமை உருவாகியுள்ளது.

ஒருபுறத்தில், இனத்தின் மானம் காக்க - இனத்தின் விடியலுக்காய் - சமுதாயத்தை சீர்தூக்கும் தவத்தில் இளைஞர்கள், யுவதிகள் தங்கள் உயிரைத் துச்சமென நினைத்து களப்பலியாகிக் கொண்டிருக்க...

மறுபுறத்தில், இனத்தின் மானம் போக்க - இனத்தின் மடியலுக்காய் - சமுதாயத்தை சீரழிக்கும் அவத்தில் வேறு இளைஞர் கூட்டம் ஈடுபட்டு சமுதாயத்தையே களப்பலியாக்கிக்கொண்டிருக்கிறது.

மேய்ப்பன் இல்லாத மந்தை போன்று நாலாபுறமும் சிதறி - மனித சமுதாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ற வழியைத் தவறவிட்டு - அலைந்து, ஒழிந்து போகும் நிலையை நாடி நமது இளம் சமுதாயம் நகர்ந்து கொண்டிருப்பது கண்டு, சமுதாயச் சிற்பிகள் ஒவ்வொருவரும் வேதனையுடன் செய்வதறியாது திகைத்துப்போய் நிற்கின்றார்கள்.

சமுதாயக் கதாநாயகர்கள், வழிகாட்டிகள் - காட்டில்.

சமுதாய வில்லன்கள், வில்லங்கீங்கள் - நாட்டில்.

குட்டித் திருத்த வேண்டியவர்கள், எட்டி நிற்பதால், தட்டிக்கேட்பவர்களின்றி முட்டி மோதுகின்றன வெற்று வேட்டுக்கள்.

இத்துன்பகரமான நிலைக்கு நாம் அனைவருமே பொறுப்பானவர்கள் என்று பொருளியல் துறைத் தலைவர் கூறும் கருத்தை நாம் ஒதுக்கிவிட முடியாது.

நமது வீட்டில், குடும்பத்தில், வீதியில், ஊரில் தவறு செய்யும் நமது பிள்ளைகளை - மாணவர்களை - இளைஞர்களை - சரியாக வழி நடத்த, தண்டிக்க, கண்டிக்க நாம் உரிய நடவடிக்கை எடுத்திருக்கின்றோமா என்பதை நாமே சிந்தித்துப் பார்த்து, சரியாகச் செயற்பட்டால் இந்தப் பிரச்சினைக்கு அரைவாசித் தீர்வு கிடைத்துவிடும்.

நமது இனத்துக்கென்று - எங்களுக்கென்று - தனியான, ஏற்றுக் கொள்ளக்கூடிய, சட்டம் - ஒழுங்கைப் பேணும் அமைப்பு வந்தால் தான் இப்பிரச்சினைக்கு நாம் முற்றாகத் தீர்வுகாணமுடியும்.

திருடனுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முறைப்பாட்டுக்காரனே திருடனைக் காவல் நிலையத்துக்கு கூட்டிச் செல்லவேண்டிய கட்டாயம் நிலவுகின்ற - அந்நியத் தன்மை மிக்க - ஒரு சட்ட, ஒழுங்கு பேணும் நிலைமையில் இத்தகைய சமுதாயச் சீரழிவுகள் - வெடிப்புகள் - உருவாவது தவிர்க்க முடியாதது.

என்றாலும் அச்சீரழிவுகள் முழுச் சமுதாயத்தையுமே கெடுத்து குட்டிச்சுவராக்க அனுமதிக்காமல், எச்சரிக்கை மணியை அடித்து, வரமுன் காப்பது நமது கடமை; பொறுப்பு.

காலத்தின் கட்டாயத்தால் எட்டி நிற்கும் நமது சமுதாயக் காவலர்கள் கூட, தாங்கள் தள்ளி நிற்பதால் சமுதாயத்துக்கு ஏற்படக்கூடிய சீரழிவை சமுதாயம் இப்போதாவது உணரட்டும் என்று எண்ணி, தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. வேளை வந்து அவர்கள் பொறுப்பை ஏற்கும்போது 'இறந்த சடலத்துக்குச் சிகிச்சை பார்க்கும்' நிலையாக அது மாறிவிடும்.

நன்றே செய்க; அதனை இன்றே செய்க.

மீளக்குடியமர்ந்து

# 6 ஆண்டுகளாகியும் காரைநகருக்கு மின் விநியோகம் இதுவரை இல்லை

காரைநகர்,ஜூன்27

காரைநகர்ப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இப்பகுதிக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சாரசபையினால் பொன்னாலை வரை மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அருகில் உள்ள காரைநகருக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரம் பெரும்பாலான தீவுப் பகுதிகளுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காரைநகர்ப் பகுதிக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படாமை குறித்து இப்பகுதி பொது அமைப்புக்கள் பலதடவை அரச அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் சுட்டிக்காட்டியும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-73)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.விஞ்ஞானசங்க சமூக விஞ்ஞானப் பிரிவினரின் கருத்தரங்குத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "மனிதஉரிமைகளைப் பகிர்ந்துகொள்ளல்" என்ற கருப்பொருளில் அருட்தந்தை ஏ.ஜ. பேர்னாட் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு சமூக விஞ்ஞான பிரிவினர் கேட்டுள்ளனர். (ம-6)

## நாட்டு நடப்பு

"நாலுமாதம்" என்றாயடி நேற்று
நாகம்மா பொங்கை சைக்களிலை போறாள்
பாலு கொண்டோடிப்போய்க் காட்டி
படிப்பிற்கிடைஞ்சல் என்றானாம் கெஞ்சி
பிறசர் என்று பெட்டியை சாட்டுக்குப் பூட்டி
பேரம்பலத்தார் அழிச்சுப்போட்டாராம்
இரக்கமில்லாத இப்பரியாரியார்
இரண்டாயிரமும் வாங்கிப் போட்டாராம்.

*- விகடகவி -*

# யாழ்.ஆஸ்பத்திரி 'எக்ஸ்-ரே' பிரிவு முழுமையாக ஸ்தம்பிதமடைந்தது

## பிலிம் கழுவும் மருந்து இல்லாததால்

யாழ்ப்பாணம்,ஜூன்27

'எக்ஸ்-ரே' பிலிம் கழுவுவதற்கான கலவை மருந்து இல்லாமையினால் யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள 'எக்ஸ்-ரே' பிரிவு கடந்த திங்கட்கிழமை முதல் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்தினை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்துள்ளதைத் தொடர்ந்தே 'எக்ஸ்-ரே' பிரிவு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கடந்தவாரம் திருகோணமலையில் இருந்து வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் இம்மருந்தினை எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளிககாததால் இந்த மருந்து எடுத்துவரப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றன.

இது தொடர்பான தகவல் சுகாதார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ம-5)

# பாரதிபுலம் கிராம அபிவிருத்திக்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்27

நல்லூர், பாரதிபுலம் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்காக கிராம அபிவிருத்தித் திணைக்களம் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியைப் பயன்படுத்திப் பாரதிபுலம் கிராமத்தில் உள்ள சிறுவர் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. மலசலகூட வசதி இல்லாதவர்களுக்குப் புதிய மலசலகூடங்களும் அமைத்துக் கொடுக்கப்டும் என்று மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.செல்வரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை -

பாரதிபுலம் கிராமத்தில் வசிக்கும் விதவைகளுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் சுழற்சிமுறையில் சுயதொழில் முயற்சிக் கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-6)

### வேம்படி மகளிர் கல்லூரி ஸ்தாபகர் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவிகள், நலன் விரும்பிகள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர். (ம-7)

### விவரங்களைப் பதியுமாறு கோரிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளாகிய மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி நாவற்குழி, கோவிலாக்கண்டி, நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்கள் தமது குடும்ப அங்கத்தவர்களின் முழுப்பெயர், தற்போது தங்கியுள்ள முகவரி, அடையாள அட்டை இலக்கம், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை தத்தமது கிராம அலுவலரிடம் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ம-117)

### விளக்கமறியல் நீடிப்பு

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 23 சந்தேகநபர்கள் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இநதச் சந்தேகநபர்களை ஜூலை 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். (ம-15)

### நாளை

ஆனி 14
வியாழக்கிழமை
திதி: அட்டமி
பின் இரவு 12.18 வரை.
நட்சத்திரம்: உத்தரம்
முற்பகல் 8.48 வரை.
சுபநேரம் : 7.25 - 8.55
ராகுகாலம் : 1.25 - 2.55
(பழைய நேரப்படி)

# வாகனப் பதிவுஇலக்கம் பெற மாற்று நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

இடம்பெயர்வு மற்றும் பிற காரணங்களால் வாகன ஆவணங்களைத் தொலைத்தவர்களுக்குச் சத்தியக் கடதாசிமூலம், வாகன அடையாளம் காட்டும் இலக்கம் வழங்கப்படவுள்ளது.

வாகனத்தின் இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம் போன்றவற்றை உள்ளடக்கியதாக இந்தச் சத்தியக் கடதாசி சமர்பிக்கப்படவேண்டும் என்று யாழ்.செயலக மோட்டார் வாகன போக்குவரத்துப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மோட்டார் சைக்கிள்களின் ஆவணங்களைத் தொலைத்தவர்களும் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சத்தியக் கடதாசி கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் வாகன அடையாளம் காட்டும் இலக்கம் வழங்கப்படும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேள்ளை -

வாகனங்களை உடைமை மாற்றம் செய்தவர்களும் அது தொடர்பான ஆவணங்களைத் தொலைத்தவர்களும் வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பான சத்தியக்கடதாசிகளை சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-5)

### வல்லை ஆஸ்பத்திரிக்கு ரூ.6 லட்சம் நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி,ஜூன்27

வடக்கு-கிழக்கு மாகாண சபை சுகாதாரத் திணைக்களத்தால் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியாலைக்கு 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிதி கிடைத்ததும் மாவட்ட வைத்தியசாலையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் செய்யப்படவுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும்பெருமாள் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் தாதிகள் விடுதி, பிரேதஅறை என்பன புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-31)

# யாழ்.குடாநாட்டில் திடீரென பெற்றோலுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.குடாநாட்டில் பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனச் சொந்தக்காரர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தனியார் கடைகளில் பெற்றோல் 150 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

யாழ்.நகரின் மையப்பகுதியில் உள்ள 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையம், யாழ்.பிரதான வீதியில் உள்ள நிலையம் மற்றும் திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், மருதனார்மடம் ஆகிய எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோல் இல்லாத காரணத்தால் நகருக்கு வருகின்ற வாகனங்கள் பெற்றோல் இன்றி அவதிப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கடந்த ஓரிரு மாதங்களாக இவ்வாறு பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதும் தனியார் கடைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதும் தொடரும் நிகழ்வாகி விட்டது என்று வாகனச் சொந்தக்காரர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

### கிளிநொச்சி இளைஞர் வவுனியாவில் கைது

வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த வன்னிப்பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி தேவராசா என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார். கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஆஸ்பத்திரியைத் திடீரெனச் சுற்றிவளைத்த படையினர் சம்பந்தப்பட்ட நபரைக் கைதுசெய்து அழைத்துச்சென்றுள்ளனர்.

காலில் ஏற்பட்ட காயம் ஒன்றுக்காக இந்த நபர் சிகிச்சைபெற்று வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### உதயவாக்கு

பகிர்ந்த துன்பம் பாதியாகிறது; பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகின்றது.


**கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!**

பனைமரத்து அடியில் ஒரு கண்ணி பதுங்கி இருந்துவிடக்கூடும். பெரியோரே! நீங்கள் பெரிதும் கவனமாய் இருங்கள். காலைக் கடனை பனை அண்டை கழிக்க நினைப்பது ஆபத்து!



# வயோதிப பெண்ணை ஏமாற்றி நகையை அபகரித்த 'பூசாரி!'

யாழ்ப்பாணம், ஜூன் 27

பூசாரி வேடத்தில் வந்த திருடன், வீட்டில் தனியாக இருந்த வயோதிபப் பெண்ணை ஏமாற்றி இரண்டரைப் பவுண் தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் வடமராட்சி சாரையடிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வயோதிபப் பெண் தனியாக இருந்த சமயம் வீட்டுக்கு வந்த சாமியார் ஒருவர் தான் பண்ணாகத்தில் இருந்து வருவதாகக் கூறி வீட்டின் முற்பகுதியில் திருநீறு வீசிவிட்டு அப் பெண்ணுக்கும் திருநீறு கொடுத்துள்ளார். அத்துடன் அந்த வீட்டுக்கு திருஷ்டி இருப்பதாகவும், சாந்தி செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார். அப்பெண்ணும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

சாமியார் அப்போது அந்த வயோதிபப் பெண்ணிடம் செம்பு நிறையத் தண்ணீரும், தேங்காயும் எடுத்து வரும்படி கூறியுள்ளார். அவரும் அவ்வாறே செய்தார்.

செம்பை வாங்கி நிலத்தில் வைத்த சாமியார் அந்தப் பெண் கழுத்தில் போட்டிருந்த சங்கிலியை செம்பினுள் போடும்படி கூறி உள்ளார். அவரும் தனது சங்கிலியைச் செம்பினுள் போட்டுள்ளார். அதன் பின்னர் செம்பின் மேல் தேங்காயை நிறைகுடம்போல வைத்த சாமியார் பூக்கள் பிடுங்கி வரும்படி அப் பெண்ணிடம் தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண்ணும் வீட்டின் பின்புறம் சென்று பூக்களைப் பிடுங்கி வந்தார். அதனை செம்பின் மேல் போட்டு வணங்கும்படி கூறிய சாமியார் பின்னர் தேங்காய் வைக்கப்பட்ட அந்தச் செம்பைத் தூக்கி உள்ளே வைக்கும்படியும் மூன்று நாள்களின் பின்னரே செம்பிலிருந்து தேங்காயை அப்புறப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

சிறிது நேரத்தில் வீட்டுக்கு வந்த தனது பேரப்பிள்ளைகளிடம் அந்த வயோதிபப் பெண் இந்த விடயங்களைக் கூறியுள்ளார். சந்தேகமடைந்த பேரப்பிள்ளைகள் செம்பிலிருந்த தேங்காயை எடுத்துவிட்டுப் பார்த்த போது உள்ளே சங்கிலி இல்லாமலிருந்தது தெரியவந்தது.

எனினும் ஏமாற்றிவிட்டுச் சென்ற போலிச் சாமியாரைப் பிடிக்க முடியவில்லை.

(ம-15)

## மட்டுவில், சரசாலைப் பகுதிகளில்

# துப்புரவு செய்யப்பட்ட பகுதிகளில் இன்னும் மிதிவெடிகளின் அபாயம்

சாவகச்சேரி, ஜூன் 27

மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் படையினரால் மிதி வெடிகள், கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டு பொது மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் அப்பகுதிகளில் இன்னமும் மிதிவெடிகள், பொறிவெடிகளின் அபாயம் இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக்கில் பூ. சங்கரப்பிள்ளை என்பவரது வீட்டு முற்றத்தில் பலாமர அடியுடன் மறைத்து வைத்திருந்த பொறிவெடி எனக் கருதப்படும் குண்டொன்று வீட்டு உரிமையாளரினால் வளவு துப்புரவு செய்யும்போது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்துப் படையினருக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அங்கு விரைந்த படையினர் அதனைச் செயல் இழக்கச் செய்தனர்.

இதேவேளை—

கடந்த வாரம் இப்பகுதியில் உள்ள பொ. வேலாயுதம் என்பவரது வீட்டு முற்றத்திலும் பொறிவெடி காணப்பட்டதாகவும்—

படையினரிடம் தெரிவித்ததையடுத்து படையினரால் அது செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும்—

இதே பகுதியில் சி. ஆறுமுகம் என்பவரது வீட்டுமுற்றத்தில் வெடிக்காத நிலையில் புதைந்து கிடந்த ஷெல் படையினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டதாகவும்—

ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள், பொறிவெடிகள், மிதிவெடிகள் யாவும் துப்புரவு செய்து அகற்றப்பட்ட பின்னரே பொதுமக்கள் இப்பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவ்வாறு ஆங்காங்கே பல இடங்களில் இவ் மனித உயிர்கொல்லிகளான வெடிபொருள்கள் இன்னும் மறைந்துகிடப்பது பொது மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. (உ-31)

## வலி. தெற்குப் பிரதேச சபைப் பகுதி

# முன்பள்ளி ஆசிரியர் 42 பேருக்கு மாதாந்த ஊக்குவிப்பு வேதனம்

வலிகாமம் தெற்கு, ஜூன் 27

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் கடமையாற்றும் 42 ஆசிரியர்களுக்கு பிரதேச சபையினால் மாதாந்த ஊக்குவிப்பு வேதனம் வழங்கப்பட்டு வருகின்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து 50 லட்சம் ரூபா வங்கியில் நிரந்தர வைப்பில் இடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு வேதனம் வழங்கப்படுவதாகவும்—

ஏனைய பிரதேச சபைகளுக்கு ஒரு முன் மாதிரியாக வலி. தெற்கு பிரதேச சபை செயற்பட்டு வருவதாகவும்—

நிதியில் இருந்து பாலர்களுக்குத் தேவையான 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளை தாம் வழங்கி இருப்பதாகவும் பிரதேச சபை தலைவர் க. கமலசேகரன் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளிகளில் சேவையாற்றி வரும் ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்பு வேதனம் ஒன்றை வடக்கு—கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புரைமைப்பு அமைச்சின் ஊடாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்தக் கொடுப்பனவுகள் சீரற்று காணப்பட்டதை தொடர்ந்து முன்பள்ளி ஆசிரியர்கள் தமது சேவைக்குரிய முழுப் பயனையும் பெறமுடியா திருந்தமை அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சு மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் சேவை புரியும் 700க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கவும், முன்பள்ளிக்கான பாடத்திட்டத்தை சரிவர நடைமுறைப்படுத்தவும் முன்பள்ளிகளின் தரங்களை உயர்த்தவும் அமைச்சின் மூலம்நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

(க-152)

## நிர்வாக சேவை பரீட்சை சனியன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கை நிர்வாக சேவையின் திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது,

இதற்கென யாழ். மத்திய கல்லூரியில் 3 பரீட்சை நிலையங்களும் வேம்படி மகளிர் கல்லூரியில் 3 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-10)

## சாவகச்சேரி வர்த்தகருக்கு!

தென்மராட்சி, ஜூன 27

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் சிபாரிசுடன் வர்த்தகர்களுக்கு வங்கிகள் ஊடாக கடன் பெறுவதற்கென வணிகர் மன்றத்தினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட படிவங்களை எதிர்வரும் முப்பதாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நிரப்பி ஒப்படைக்குமாறு வணிகர் மன்றச் செயலாளர் கேட்டுள்ளார். (உ-117)

## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளுக்கு வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான—தகவல் தொழில் நுட்பம் தொடர்பான—செயலமர்வுஎதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-117)

# சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, ஜூன் 27

கந்தரோடை வீற்றாக்கை ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி கோயில் தேர்த் திருவிழா இன்று புதன் கிழமை பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது. வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும், வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் நடைபெறும். (ம-152)

★ ★ ★

கோண்டாவில், ஜூன் 27

கோண்டாவில் வடக்கு சாமுண்டிதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய 1008 சங்காபிஷேக விழா இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நண்பகல் அன்னதானமும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ம-86)

★ ★ ★

நெல்லியடி, ஜூன் 27

வரணி – மாசேரி அருள்மிகு உத்திரமாகாளியம்மன் தேவஸ்தான புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை அதிகாலை 5. 47 தொடக்கம் 7. 29 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும். (ம-109)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 27

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ அங்குசபாசப்பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும் மணவாளக்கோல உற்சவத்தை ஒட்டி நவோத்தர சகஸ்ரசங்காபிஷேகம் நடத்தி வைக்கப்படும். மறுநாள் 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வைரவ சாந்தியுடன் உற்சவம் முடிவடையும்.

உற்சவ தினங்களில் தினமும் மாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரை 'பெரியபுராணம்' என்ற தலைப்பில் ஆசிரியர் இரா. செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ம.173)

தென்மராட்சி ஜூன் 27

துன்னாலை கிழக்கு வெலிக்கன் தோட்ட பிள்ளையார் ஆலய மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அடுத்த மாதம் நான்காம் திகதிரதோற்சவமும்மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ-117)

★ ★ ★

காரைநகர் கிழவன் காடு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்அலங்கார உற்சவமும் இசைவிழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றன

தினமும் மாலை 4.00 மணிக்கு இசைவிழாவும் மாலை 5-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி தெரு வீதி உலா வருதலும் இடம் பெறுகின்றது.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக மாணவிகளால் தினமும் இசைக்கச்சேரி நடத்தப்பட்டு வருகின்றது.

(உ-73)

★ ★ ★

அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய ஆனி உத்தரமும், நடேசர் தரிசனமும் நாளை வியாழக்கிழமை காலை 5-30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (உ-9)

## கூத்து நிகழ்ச்சி

நெல்லியடி, ஜூன் 27

புலோலி—வராத்துப்பளை இளைஞர்களின் ஏற்பாட்டில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து நாளை வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு உத்திராவத்தை அருள்மிகு ஞானவைரவர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

(உ-109)

## சரசாலையில் தேடுதல்

சாவகச்சேரி, ஜூன் 27

மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் கிளைமோர்குண்டு வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து சரசாலைக் காட்டுப்பகுதியில் பலத்த தேடுதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேடுதல் நடவடிக்கை காரணமாக சரசாலைக்கும் வடமராட்சிக்குமான போக்குவரத்துக்கள் சுமார் 2 மணித்தியாலங்கள் தடைப்பட்டன.

பொதுமக்கள் நீண்டநேரம் காத்திருந்தே பயணத்தைத் தொடர்ந்தனர். (க-31)

# இணுவில் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகம் திங்களன்று

இணுவில் கந்தசுவாமி தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோக்ஷண சப்ததச குண்ட பஞ்சதள, இராஜ கோபுர, மணிக்கோபுர மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் இரண்டாம் திகதி திங்கட்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வீக கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் வடக்கு வீதியில் பிரமாண்டமான முறையில் 17 யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு கிரியைகள் இடம்பெறுகின்றன.

ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களின் எண்ணிக்கையை எதிர்பார்த்து நான்கு தினங்களுக்கு அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10. 00 மணி தொடக்கம் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12. 00 மணி வரையில் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சிவஸ்ரீ உ. அபராஜிதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்துவார்.

2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 56 மணி முதல் 10. 26 மணி வரையுள்ள சுபவேளையில் வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானுக்கும், புதிதாக அமைக்கப்பெற்ற ஐந்து தள இராஜ கோபுரம், மணிக் கோபுரம் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தினத்தன்று ஆசியுரைகள், அருளுரைகள், சிறப்புரைகள் இசைக் கச்சேரிகள் ஆகியன இடம் பெற்று மாலை 4. 00 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 தினங்களுக்கு காலையில் மண்டலாபிஷேகம் நடைபெறும். (உ-152)

# பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்கள் – ரிதீரேகா





உங்கள் குடும்ப வங்கி

**23.06.2001 இல் நடைபெற்ற பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்களின் 25 ஆவது சீட்டிழுப்பில்**
**தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் கிளையில் பரிசுபெற்ற 148 அதிர்ஷ்டசாலிகள் விவரம்**

**நான்காவது பரிசு ரூபா 5,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 038 | 09O | 0859 | வி. இன்பநாதன் | கொக்குவில் |

**ஐந்தாவது பரிசு ரூபா 2,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 046 | 04V | 0180 | வி. எஸ். சிவரட்ணம் | சுன்னாகம் |
| 112 | 13S | 0117 | என். நிரோஜா | அச்சுவேலி |
| 060 | 13P | 0957 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 138 | 12C | 0006 | எஸ். பாலகிருஸ்ணன் | கோண்டாவில் |
| 070 | 07N | 0306 | வி. ஸ்ரீபிரகாஸ் | சாவகச்சேரி |
| 043 | 12S | 0035 | கே. கலாமதி | உரும்பிராய் |
| 153 | 13N | 0444 | எஸ். ஜெகதீஸ்வரி | கோண்டாவில் |

**ஆறாவது பரிசு ரூபா 1,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 156 | 15Y | 0873 | துசாரா குணரட்ணம் | தெல்லிப்பழை |
| 095 | 13S | 0728 | எஸ். கஜானி | அச்சுவேலி |
| 044 | 05D | 0371 | வி. தவப்புதல்வன் | கந்தர்மடம் |
| 130 | 12C | 0599 | ஜி. சிவாஜினி | நல்லூர் |
| 023 | 16E | 0389 | வி. நிரஞ்சனா | நீர்வேலி |
| 151 | 14E | 0153 | எஸ். சுமங்கலா | திருநெல்வேலி |
| 021 | 14B | 0817 | என். கீர்த்திகா | கோண்டாவில் |
| 019 | 09O | 0125 | பி. அபினயா | யாழ்ப்பாணம் |
| 009 | 13H | 0255 | எ. பகீரதன் | உரும்பிராய் |
| 115 | 13A | 0364 | பி. பானுமதி | கொக்குவில் |
| 091 | 09A | 0843 | வி. வேல்நிதி | கோப்பாய் |
| 050 | 10C | 0172 | என். முகுந்தன் | தெல்லிப்பழை |
| 103 | 13N | 0891 | கே. விக்னேஸ் | யாழ்ப்பாணம் |
| 018 | 14G | 0046 | என். குணபாலன் | யாழ்ப்பாணம் |
| 123 | 15Y | 0677 | வை. தர்மகிருஸ்ணன் | கோண்டாவில் |
| 054 | 14F | 0065 | எம். பி. மேரி திரேசா | நீர்வேலி |
| 108 | 12C | 0223 | ஈ. சபாரட்ணம் | நல்லூர் |
| 092 | 13S | 0015 | ஜெ. விஜயசுந்தரம் | பண்டத்தரிப்பு |
| 004 | 14G | 0995 | ரி. கௌதமன் | உரும்பிராய் |
| 121 | 14E | 0182 | எஸ். சாந்தகுமாரி | மானிப்பாய் |
| 032 | 13B | 0636 | ஏ. புஸ்பராணி | நீர்வேலி |
| 056 | 16E | 0857 | ஜெ. சரண்யா | ஆனைக்கோட்டை |
| 103 | 13A | 0422 | எஸ். ஜெ. சர்மா | சுன்னாகம் |
| 110 | 13A | 0955 | யு. குணரத்தினம் | ஓட்டுமடம் |
| 008 | 12D | 0982 | என். சிவகுமார் | திருநெல்வேலி |
| 105 | 15V | 0223 | எ. சி. ஜெ. கெனடி | இளவாலை |
| 033 | 13H | 0488 | எம். பரமேஸ்வரன் | திருநெல்வேலி |
| 065 | 10C | 0226 | எஸ். கனகரட்ணம் | நல்லூர் |
| 077 | 10C | 0694 | கே. சிவராஜா | நாயன்மார்கட்டு |
| 129 | 12C | 0107 | வை. சண்முகநாதன் | உடுவில் |
| 077 | 12S | 0782 | ஏ. பி. தர்மநாயகம் | யாழ்ப்பாணம் |
| 105 | 08V | 0380 | கே. மணியழகன் | யாழ்ப்பாணம் |
| 081 | 10F | 0964 | கே. துவாரகன் | சுன்னாகம் |
| 015 | 16O | 0624 | ஆர். மகேஸ்வரன் | உடுவில் |
| 120 | 08V | 0424 | எஸ். அம்பலவாணர் | நீராவியடி |
| 110 | 03S | 0159 | எஸ். கந்தசாமி | சாவகச்சேரி |
| 065 | 10C | 0576 | எஸ். கனகரட்ணம் | நல்லூர் |
| 075 | 10C | 0770 | ஆர். இராசேந்திரம் | கொக்குவில் |
| 011 | 14G | 0511 | பி. தனபாலசிங்கம் | துணைவி |
| 090 | 14E | 0271 | எஸ். கோகுலசெல்வன் | அச்சுவேலி |
| 086 | 13S | 0888 | என். கிருஸ்ணராசா | கோண்டாவில் |
| 149 | 15Y | 0907 | ஏ. ஜேசுதாசன் | குருநகர் |
| 092 | 14B | 0280 | தனுஜன் | நல்லூர் |
| 085 | 13N | 0544 | கே. திருமகள் | கொடிகாமம் |
| 038 | 04E | 0147 | வி. மகேஸ்வரன் | கந்தர்மடம் |
| 029 | 14B | 0514 | ஏ. ராகவன் | யாழ்ப்பாணம |
| 131 | 12C | 0073 | ஜி. சிவாஜினி | நல்லூர் |
| 009 | 20Q | 0313 | ஜி. கருணாகரன் | கோப்பாய் |
| 022 | 13B | 0356 | பி. சசிகலா | அச்சுவேலி |
| 047 | 09O | 0617 | பி. சிவதர்சினி | ஆனைப்பந்தி |
| 062 | 14F | 0189 | வி. எஸ். தனுஜா | தோப்பாய் |
| 029 | 13H | 0670 | எம். இன்பராசா | கோப்பாய் |
| 049 | 04V | 0834 | பி. தேவரஞ்சனா | சங்கானை |
| 134 | 14E | 0224 | ஜே. பத்மகுமார் | யாழ்ப்பாணம் |
| 032 | 16E | 0949 | எம். ஜேசுதாசன் | யாழ்ப்பாணம் |
| 067 | 16E | 0704 | எம். பி. மேரிதிரேசா | நீர்வேலி |
| 039 | 13H | 0174 | ஆர். வி. ரட்ணம் | கந்தர்மடம் |
| 006 | 13H | 0004 | ஜி. யோகேந்திரராஜா | நல்லூர் |
| 117 | 13A | 0144 | ரி. கிரிதரன் | யாழ்ப்பாணம் |
| 068 | 14E | 0936 | எஸ். சிவாஜிகணேசன் | மானிப்பாய் |
| 038 | 12S | 0074 | என். சிவகுமார் | உரும்பிராய் |
| 061 | 14F | 0284 | எஸ். புவனேஸ்வரன் | கந்தர்மடம் |
| 104 | 13N | 0541 | கே. விக்னேஸ் | யாழ்ப்பாணம் |
| 102 | 02J | 0932 | எல். கிருஸ்ணகுமார் | திருநெல்வேலி |
| 050 | 13S | 0536 | எஸ். தயானந்தன் | கோப்பாய் |
| 063 | 13P | 0241 | எம். சஞ்ஜீவன் | வட்டுக்கோட்டை |
| 098 | 12D | 0460 | பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் |
| 179 | 12O | 0979 | டி. எம். ஜோசபின் | யாழ்ப்பாணம் |
| 038 | 12S | 0129 | என். சிவகுமார் | காரைநகர் |
| 031 | 16E | 0021 | என். நிசாந்தன் | யாழ்ப்பாணம் |
| 034 | 14B | 0308 | வி. உதயகுமாரன் | நயினாதீவு |
| 113 | 13N | 0634 | எஸ். ஜி. சுண்முகதாஸ் | புத்தூர் |
| 071 | 09A | 0117 | பி. பிறேமிளா | அரியாலை |
| 106 | 13S | 0567 | என். சுமித்திராதேவி | அச்சுவேலி |
| 068 | 10C | 0816 | பி. தேவநாயகம் | கல்வியங்காடு |
| 046 | 04V | 0236 | எஸ். சிவரட்ணம் | சுன்னாகம் |
| 146 | 14F | 0532 | ஆர். தாட்சாயினி | அச்சுவேலி |
| 065 | 09A | 0631 | ஆர். கல்வலைராஜா | கந்தர்மடம் |
| 097 | 14B | 0525 | எஸ். சுந்தரலிங்கம் | மட்டக்குளியா |
| 001 | 13O | 0072 | எஸ். சிவநேசன் | காரைநகர் |
| 033 | 16O | 0443 | ஆர். நேசகுமார் | கொக்குவில் |
| 155 | 14E | 0235 | எஸ். ஜெயந்தன் | சித்தன்கேணி |
| 089 | 13P | 0346 | ஏ. ஆர். கே. ஜேசுதாசன் | வட்டுக்கோட்டை |
| 061 | 04E | 0349 | எஸ். நிவேகா | மானிப்பாய் |
| 126 | 13N | 0966 | ஆர். பி. சங்கர் | திருநெல்வேலி |
| 057 | 12S | 0145 | எஸ். சுப்பிரமணியசெட்டியார் | கொக்குவில் |
| 086 | 12S | 0775 | ஆர். றிகேஸ் | வட்டுக்கோட்டை |
| 130 | 15Y | 0012 | ஏ. ஜெயவேல்சிங்கம் | வட்டுக்கோட்டை |
| 128 | 12O | 0921 | எஸ். ஜெயராசா | நல்லூர் |
| 084 | 10C | 0696 | ரி. சண்முகசுந்தரம் | யாழ்ப்பாணம் |
| 068 | 16E | 0065 | ஈ. நிருபா யாழினி | சுண்டுக்குளி |
| 010 | 14F | 0205 | என். குணபாலன் | திருநெல்வேலி |
| 113 | 08V | 0650 | ஜி. ஏ. கனகசபாபதி | கந்தர்மடம் |
| 022 | 12P | 0832 | எஸ். முகுந்தன் | கொக்குவில் |
| 009 | 20Q | 0236 | ஜி. சுஜீதரன் | கோப்பாய் |
| 073 | 10F | 0404 | கே. சுதாஜினி | ஆனைக்கோட்டை |
| 034 | 16O | 0536 | ஆர். நேசகுமார் | கொக்குவில் |
| 122 | 12D | 0648 | எஸ். அஜித்குமார் | யாழ்ப்பாணம் |
| 109 | 13A | 0614 | எஸ். சத்கெங்கன் | கொக்குவில் |
| 016 | 09O | 0394 | எஸ். கிருஸ்னாநந்தன் | உரும்பிராய் |
| 105 | 15V | 0343 | ஏ. சி. ஜெ. கெனடி | இளவாலை |
| 099 | 12C | 0535 | எஸ். புஸ்பலீலா | ஆனைப்பந்தி |
| 124 | 15V | 0235 | எஸ். மனோரதி | கந்தர்மடம் |
| 073 | 10F | 0169 | ஏ. துஸ்யந்தி | திருநெல்வேலி |
| 153 | 14F | 0359 | பி. அனர்த்தனி | மானிப்பாய் |
| 020 | 16O | 0877 | ஏ. எம். பிறிஜெற் | குருநகர் |
| 005 | 12S | 0706 | எஸ். சண்முகதாஸ் | கொக்குவில் |
| 010 | 12P | 0171 | ரி. குமாரவேலு | வட்டுக்கோட்டை |
| 049 | 10C | 0488 | என். பழமப்பன் | நல்லூர் |
| 045 | 16E | 0122 | கே. சிவானந்தன் | யாழ்ப்பாணம் |
| 026 | 16O | 0667 | கே. கோபிதா | சுழிபுரம் |
| 121 | 12D | 0606 | ரி. சரண் யூட்ஸ் | கோப்பாய் |
| 032 | 12P | 0700 | ரி. சிவபாக்கியம் | கொக்குவில் |
| 130 | 09N | 0334 | எம். மரியசூசை | யாழ்ப்பாணம் |
| 002 | 12P | 0589 | எஸ். தர்சனா | புத்தூர் |
| 100 | 08V | 0464 | ஏ. ரம்யா | சித்தன்கேணி |
| 141 | 12C | 0886 | வி. சிவபாதவிருதயர் | யாழ்ப்பாணம் |
| 038 | 04V | 0474 | ஜெ. ஜெஸ்மியா | கோண்டாவில் |
| 046 | 04E | 0001 | ரி. இராதாகிருஸ்ணமூர்த்தி | புத்தூர் |
| 040 | 12P | 0947 | எஸ். வெற்றிவேலாயுதம் | யாழ்ப்பாணம் |
| 096 | 13P | 0993 | வி. சேயோன் | கோண்டாவில் |
| 079 | 13N | 0877 | ஆர். பகீரதன் | உரும்பிராய் |
| 073 | 10C | 0612 | என். லோஜினி | யாழ்ப்பாணம் |
| 149 | 12C | 0165 | எஸ். யோகேஸ்வரன் | காரைநகர் |
| 093 | 12S | 0335 | எஸ். சிவபாலன் | யாழ்ப்பாணம் |
| 026 | 13P | 0709 | பி. செல்லத்துரை | பருத்தித்துறை |
| 013 | 10F | 0715 | எஸ். நாகபூசணிதேவி | திருநெல்வேலி |
| 144 | 14E | 0504 | ஆர். பகீரதன் | உரும்பிராய் |
| 126 | 16N | 0295 | எஸ். சற்குணபாலன் | அரியாலை |
| 107 | 15Y | 0304 | வை. கனகசபாபரி | நல்லூர் |
| 071 | 10F | 0840 | பி. ஸ்ரீஸ்கந்தன் | வுட்டுக்கோட்டை |
| 065 | 16E | 0373 | பி. ஞானலெட்சுமி | கோண்டாவில் |
| 058 | 16E | 0123 | ஜெ. ரம்ணா | ஆனைக்கோட்டை |
| 143 | 14E | 0935 | எஸ். ரி. இராசையா | சண்டிலிப்பாய் |
| 143 | 13G | 0868 | பி. சதாசிவம் | அரியாலை |
| 067 | 04E | 0230 | எஸ். ஜே. நிலோஜன் | பண்டத்தரிப்பு |
| 143 | 13A | 0095 | வி. சர்மா | கரவெட்டி |
| 093 | 12D | 0026 | கே. குகவதனா | யாழ்ப்பாணம் |
| 027 | 13P | 0799 | ஏ. சுதர்சன் | யாழ்ப்பாணம் |
| 001 | 13G | 0700 | பி. சிவநேசன் | காரைநகர் |

அடுத்துவரும் சீட்டிழுப்புகளில் அதிக பரிசுகளை வெல்லவும், ஒக்ரோபர் 2001 இல் நடைபெறவுள்ள மாபெரும் சீட்டிழுப்பில் முதலாவது (GRAND DRAW) பரிசாகிய 35 லட்சம் பெறுமதியான காரை வெல்லுவதற்கும் அதிக சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யுங்கள்.

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/17234)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 28 - 03 - 1929

இறப்பு 28 - 05 - 2001

**அமரர் சிற்றம்பலம் தங்கத்துரை**

(ஓய்வு பெற்ற கணக்காளர், யாழ்.மாநகரசபை)

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
நண்பர்கள்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(89438)

# 3ஆம் மாத நினைவலைகள்



பிறப்பு 16 - 10 - 1978

இறப்பு 31 - 03 - 2001

**கிருஷ்ணநாதன் சசிகலா**

காண்போம் எனக் காத்திருந்தோம்
கற்பனைகள் பல வளர்த்திருந்தோம்
கூடிவாழ நினைத்திருந்தோம்
தினம் உன் வரவை எதிர்பார்த்திருந்தோம்
ஆறாத் துயரினில் ஆழ்த்திவிட்டு
எங்கம்மா நீ சென்றுவிட்டாய்?

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(89452)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 - 06 - 1917

உதிர்வு 27 - 06 - 2000

**அமரர்**
**சூசை மாணிக்கம் பெர்னான்டோ**
**(S.M.FERNANDO)**

"வாழ்ந்த உறவுகளை வாடவிட்டு
வாழ்வு பெறவென்றே
வான்வீடு சென்றனையோ?
ஆல் போல் வாழ்ந்து
எம்மவர்க்கு வழிகாட்டி
இறுதியில் இறைவனைச் சேர்ந்தனையோ?
கல்லறையில் உம்மை வைத்து
கண்ணீரால் நனைத்திட்டோம்!
உலகில் வைத்திருக்க இயலாமல்
உள்ளத்தில் வைத்து உருகுகின்றோம்."

உமது பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமகன், பேரப்பிள்ளைகள், பூட்டன், பூட்டி, உறவினர்கள்.**

105, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(89294)

## பாடசாலை நூலகங்களுக்கு நூல் விநியோகம்

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு ஒரு தொகுதி கல்வியியல் சம்பந்தமான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.கல்விவலய அலுவலகத்தில் வைத்து இவ்வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-86)

## தீவுப்பகுதியில் மீண்டும் கிளைகள

தீவுப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து பல வருடங்கள் ஆகியும இயங்காமல் இருந்த வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கத்தின் புங்குடுதீவு, நயினாதீவுக் கிளைகள் தற்பொழுது மீண்டும் இயங்கத தொடங்கியிருப்பதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-167)

## அபிவிருத்தித் தொண்டர்களுக்கு தொழிற்பயிற்சிகள்

அரியாலை,ஜூன்27

யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்களுக்கான தொழிற்பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்.பிரதானவீதியில் அமைந்துள்ள மரவேலை பயிற்சிப் பாடசாலையில் ஆண்களுக்கான மரப்பொருள் கடைச்சல் இயந்திர மரவேலை, பெண்களுக்கான கடல் வளத்தொழில்நுட்பம் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள பற்றீசியன் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆண்களுக்கான மின் தொழில்நுட்பம், பெண்களுக்கான தையல் இயந்திரம் திருத்துதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி இரு பயிற்சி நிலையங்களிலும் நடைபெற்றுவரும் ஐந்து பயிற்சி நெறிகளிலும் நூறு அபிவிருத்தித் தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

அபிவிருத்தித் தொண்டர்களுக்கு தொழிற்பயிற்சி மட்டும் இன்றி அடிப்படை ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழி அறிவுப் பயிற்சிகளும் தலைமைத்துவம்; உளவியல் போன்ற வகுப்புக்களும் இடம்பெற்று வருகின்றன. (ம-17)

## வறிய சிறுவர்களுக்கு பணஉதவி

ஊர்காவற்றுறை,ஜூன்27

ஊர்காவற்றுறை பிரதேச செயலா பிரிவில் சிறுவர்பாதுகாப்பு நிதியத்தினால் பெற்றோரை இழந்த மற்றும் மிகவும் வறியகுடும்பங்களைச சேர்ந்த சிறுவர்களுக்கு, பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் என்பன வாங்கும் பொருட்டு பண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக்களால் தெரிவு செய்யப்பட்டு சிபார்சு செய்யப்படும் சிறுவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் சிறுவர்களுக்கு சீருடைகள் வாங்குவதற்கு தலா 230ரூபாவும், பாடசாலை உபகரணங்கள் வாங்குவதற்கு தலா 220ரூபாவும், விசேட தேவைகளுக்கென தலா 350ரூபாவும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கு தலா 100ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-16)


# FORUT - Jaffna

## Vacancy: Project Co-ordinator, Kayts office

A Vacancy exists at our Kayts office for the post of Project Co-ordinator.

**Major Tasks:**

1. Running/maintaining the Kayts office.
2. Implementing accountable and transparent programme and financial management.
3. Management of partnership agreements.
4. Staff and community leaders development.
5. Monitoring and reporting in English.

Applicants must be below the age of 55, have sufficient education to handle above tasks with a minimum of 5 years experience in related fields.

Applications must reach:

*Programme Manager, FORUT,*
*67, Temple Road, Jaffna.*
before 31st July 2001.

**Only shortlisted candidates will be called for the interview.**

(89430)


# பவளவிழா

27-06-2001



நாயகன்

## திரு.அ.பர்னாந்து

*(முத்தமிழ் கைவந்த முதுபேராசான்)*

**பல்லாண்டுப் பாமாலை**

வெண்பா

தண்டமிழின் ஆசார்! தலை சிறந்த முத்தமிழின்
கொண்டல்! பவள விழாக்கோல நாள் - கண்டவராம்
பாவல்லோன் "பர்னாந்து" பல்லாண்டு வழியரோ,
பூ நல்ல சேவை புரிந்து.

- பண்டிதர், கவிமாமணி, திரு.க.த.ஞானப்பிரகாசம் (அல்வாயூர்)

"விழுமிய சொல்லாற்றும் வித்தகன் பெர்ணாண்டோ"
பழுதின்றிப் பல்லாண்டு வாழ்க - கெழுமியநல்
உற்ற நல் நண்பன், நமக்கு உறுதுணையாய்
வெற்றியுடன் வாழ்க விழைந்து.

- மதுரைப் பண்டிதர் திரு. R.K.முருகேசு (கருணையூர்)

**விருத்தம்**

இன்பத்தமிழ் பயிலும் எழில் இதய மாணவர்க்கு
அன்புக்கரம் நீட்டி அரும் பொருள் சேர் பாடல்களும்,
தன் பற்றெதிரொலிக்கும் தரம் வாய்ந்த கட்டுரையும்
பொன் பெற்றதொப்ப நல்கும் போதகற்குப் பல்லாண்டு!

-அருட்செல்வி: M.ஜீவந்தி,
புனித லூர்து கன்னியர் மடாதிபதி (கரவையூர்)

நன்றி:- **"இந்திரா உணவகம்",**
முதன்மைச்சாலை, நெல்லியடி, கரவெட்டி.

விழா நாயகன் முகவரி:- *ஆசாரியார் வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.* (C/17223)

உ

**மல்லாகம் கோட்டைக்காடு**
**அருள்மிகு சாளையம்பதி முருகன் தேவஸ்தானம்**

# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் 2001

**28-06-2001 முதல் 09-07-2001 வரை**

| | | | |
|---|---|---|---|
| 28-06-2001 | வியாழக்கிழமை | பகல் 10.00 மணி | - கொடியேற்றம் |
| 07-07-2001 | சனிக்கிழமை | பகல் 10.00 மணி | - இரதோற்சவம் |
| 08-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | பகல் 10.00 மணி | - தீர்த்தோற்சவம் (திருவோணம்) |
| 08-07-2001 | ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.30 மணி | - கொடியிறக்கம் |
| 09-07-2001 | திங்கட்கிழமை | மாலை 3.00 மணி | - பூங்காவனமும், திருக்கலியாணமும் |

மஹோற்சவகுரு:- **பிரம்மஸ்ரீ இரவிச்சந்திரக்குருக்கள்**
சொற்பொழிவு:- **சிவத்திரு. வ.குமாரசாமிஜயா** அவர்கள்

முருகன் அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானைத் தரிசித்து உய்வீர்களாக!

*ஆலய பரிபாலன சபை,*
*இந்து இளைஞர் தொண்டர் சபை.*

(89310)

# வீதிகள், குளங்களின் சாதிப் பெயர்களில் தமிழ் மக்களின் சரித்திரம் பொதிந்துள்ளது

யாழ்ப்பாண மாநகர சபையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் ம.மங்களநேசன், யாழ்ப்பாண மாநகரப் பகுதியிலுள்ள வீதிகள், குளங்கள் என்பவற்றின் சாதி அடிப்படையிலான பெயர்களை நீக்க வேண்டும் என்று முன்மொழிந்ததை சபை ஏற்று அவை பற்றிய விபரங்களைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, பொதுமக்கள் மற்றும் பொது நிறுவனங்களின் கருத்துக்களைப் பெறுதல் வேண்டும் என முடிவு செய்த செய்தி 30-04-2001 ஆம் திகதி உதயன் நாளிதழில் வெளிவந்தது.

இந்த முன்மொழிவு யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்புகளின் வரலாற்று ரீதியான ஆய்வு அறிவு கொண்டோ அல்லது அனுபவ ரீதியான சிந்தனையினாலோ செய்யப்பட்டதல்ல.

ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு வரலாறு உண்டு. இது புத்தசமய, சிங்கள வரலாற்றுக்கு முற்பட்டது. ஆனால் தமிழ் மக்களின் வரலாறு




வெறும் புராணம் என்றும், இலக்கிய கவிகள் என்றும் 1926ஆம் ஆண்டு செ.இராசநாயகம், அவர்கள் நோக்கியதன் விளைவாக ஈழத்தமிழர் வரலாறு குழப்பப்பட்டு விட்டது. ஆனால் அவருக்கு முதலியார் பட்டம் பெற வாய்ப்பாகி விட்டது. அவர் கருத்தை மழுப்பி எழுதியவர் பெரியார் சுவாமி ஞானப்பிரகாசர். இவர்களின் கருத்துக்களுக்கு எதிராகப் பத்திரிகைகளில் வெளியான விடயங்கள் புத்தக ரூபமாக வெளியிடப்படாததால் அவை மறைக்கப்பட்டன.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் அமுலுக்கு வரவிருந்ததையிட்டுத் திரும்பவும் தமிழர்வரலாறு பற்றிய பிரச்சினை தலை தூக்கியது. இதை முறியடிப்பதற்காக பேராதனையில் திட்டமிடப்பட்டு தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் ஈழத்தமிழர் வரலாற்றை மேலும் சிதைத்து விட்டனர். பட்டங்கள், பதவிகள் பெற்றனர். அதே பாணியில் யாழ்ப்பாணத்திலும் சிலர் எழுதிப் பயனடைந்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் இருந்த எதிர்ப்புக் கூட இவர்களுக்கு எதிராக எவரும் செய்யவில்லை. ஆனால், ஒரேயொரு தமிழ்த்தலைமகன் வேலணையூர் புலவர், பண்டிதர் க.ஜெகந்நாதன் அவர்கள் மாத்திரம் தனது, 'யாழ்ப்பாணத்தரசர் வரலாறும் காலமும்' என்ற நூலில் (1987) பல வரலாற்று உண்மைகளை எடுத்துக் காட்டிப் பல்கலைக்கழகச் சிந்தனைகளுக்குச் சவால் விட்டிருந்தார். வரலாற்று மாணவர்கள் குழப்பமடையும் நிலையை அவர்கள் உருவாக்கியுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அடுத்து 1930ஆம் ஆண்டின் பின் வந்த தமிழ் ஆசிரியர்கள் சிலர், தமிழ் அபிமானத்தினால் தமது பெயர்களை தமிழில் எழுத வேண்டுமென்று ஆர்வம் கொண்டு 'பாலசுப்பிரமணியம்' என்பதை 'இளமுருகனார்', நாகராஜா என்பதை 'பணிவேந்தன்' அல்லது 'வேந்தனார்' எனப் பலவாறு மாற்றிப் பெருமைப்பட்டனர். இன்று பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் ஒரு தமிழரா என ஊகிக்க வேண்டிய அளவுக்கு பெயர் இடப்படுகின்றது.

இத்துடன் தமிழ் அபிமானம் நிற்கவில்லை. 'காரைதீவு' பாலம் அமைக்கப்பட்டதும் அது 'காரைநகர்' ஆனது. 'குரும்ப வெட்டி' என்பது 'குரும்பசிட்டி'யானது. ஆனால் அளவெட்டி, கரவெட்டி மாறவில்லை. இதேபோன்று 'கள்ளியங்காடு' என்பதை 'கல்வியங்காடு' என மாற்றிக் கொள்வதிலும் ஒரு வித திருப்தியடைந்தனர். ஆனால், ஊர்களின் வரலாற்றுத் தன்மையை தமிழ் அபிமானிகள் அறிந்திருக்கவில்லை.

1950ஆம் ஆண்டளவில் ஆசிரியர்கள், அபிமானிகள் அலுத்துப் போக அரசியல் கட்சிகள் பிரசாரத்திற்காக சில தெருக்களின் பெயர்கள் சாதிப் பெயருடன் தொடர்புபட்டிருப்பதால் அதை மாற்ற வேண்டும் என்று சில முன்னெடுப்புகள் செய்தனர். உதாரணமாக - யாழ்.பெருமாள் கோயிலடிப் பகுதியில் இருந்த 'சேணியர் தெரு' இப்பொழுது இல்லை. கச்சேரி - நல்லூர் வீதிப் பகுதியில் இருந்த 'சிவியார் தெரு' இப்போது இல்லை. கள்ளியங்காடு 'தட்டாதெரு' புதிய செம்மணி வீதி என மாற்றப்பட்டது.

இங்குள்ள தட்டாரின் உரிமைச் சொத்துத்தான் 'தட்டான் குளம்'. இதைச் சிலர் 'வட்டக்குளம்' எனத் தவறாகக் கூறுவதும் உண்டு. இதைவிட, 'வண்ணான்குளம்' வண்ணாரின் உரிமைச் சொத்து. அவர்கள் பரம்பரை, பரம்பரையாக தமது தொழிலைச் செய்து, அங்கு உடுபுடைவைகளை விரித்து உலர்த்தும் உரிமையும் உடையவர். இவைகள் தோம்பு உறுதிகளில் உள்ளவை. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

யாழ்ப்பாண மாநகர சபை, தெருக்களின் பெயர்களை மாற்றுவதில் செய்த பெரும் குளறுபடியில் குறிப்பிடத்தக்கது. 'யாழ்ப்பாணம் அரசு' மற்றும் 'நல்லூர் அரசு' இவை இரண்டையும் கண்டி அரசுடன் தொடர்புபடுத்திய கண்டி வீதி பற்றியது.

நல்லூர் செட்டித் தெரு 'ஓம்மினி பஸ் வேலுப்பிள்ளை' நல்லூரிலிருந்து 1945ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புக்கு பேருந்து சேவையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையிலும் ஆரம்பித்து நாயன்மார்காடு ஊடாகச் சென்ற கண்டி வீதியாலேயே சென்றுள்ளார்.

ஆனால் 1950ஆம் ஆண்டளவில் செம்மணி உப்பளத்திலிருந்து, அரியாலை ஊடாக புதிய வீதியை அமைத்து சுண்டிக்குளி பஸ்தியன் பிள்ளை சாய்ப்பு வரை அது கொண்டு வரப்பட்டது. இந்தப் புது வீதியைக் கண்டி வீதி எனப் பெயரிட வேண்டும் எனச் சில மாநகர உறுப்பினர்கள் விரும்பினர். இதை புறொக்ரர் இராசதுரை (நல்லூர் வாட்டு உறுப்பினர்) கடுமையாக எதிர்த்தார். தகுந்த காரணங்கள் காட்டினார். ஆனால் அப்பொழுது கொட்டடியில் இருந்த குண்டர்கள் சிலர் அவரது வீட்டிற்கு இரவு 8.00 மணியளவில் வந்து யன்னல்களை உடைத்துவிட்டுச் சென்றனர் என்பது தெரியவந்தது. அப்போது புறொக்ரர் இராசதுரைக்கு அரசியல் கட்சிச் செல்வாக்கு இருக்கவில்லை. ஆகவே புதிய வீதி, கண்டி வீதியானது. வரலாற்று முக்கியமான கண்டி வீதி வெறும் செம்மணி வீதியானது.

யாழ்ப்பாண வைபவமாலைப்படி பரராசசேகரமகராசாவின் மகன் பரநிருபசிங்கன் நல்லூரிலிருந்து கண்டி சென்று கண்டி மகாராணியின் தீராத வயிற்று வலியை மாற்றியதற்கு கண்டி ராசா பல பரிசுகளைக் கொடுத்து வழியனுப்பினான். இது நடந்தது 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியெனலாம். கர்ண பரம்பரைக் கதையின் படி பரநிருபசிங்கன் வடக்கன் மாட்டு வண்டிலிலேயே பூநகரி, வன்னியூடாகக் கண்டி சென்றான் என்பதை அறிய முடிகிறது. இந்த முக்கிய நிகழ்வை தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் மறைத்து எழுதுகின்றனர். இதுபற்றி யாழ்.மாநகரசபைக்கு 31-03-2001 திகதியில் கடிதம் அனுப்பியுள்ளேன்.

இலங்கையில் ஆண்ட விஜய சிங்கன் அல்லது விஜயன் (கி.மு 483) வழித்தோன்றல் என்று தன்னைக் கூறி இங்கு வந்து இலங்கையின் அரைவாசிப் பகுதியை கி.பி. 795இல் கைப்பற்றினான் உக்கிர சிங்கன் . தனது ஆட்சியை கதிரமலையில் (தற்போதைய கந்தரோடை - சுன்னாகம்) தலைநகர் கொண்டு ஆரம்பித்தான். சில காலத்தின் பின் தனது தலைநகரை 'செங்கடகல' என்ற இடத்திற்கு மாற்றினான். உக்கிரசிங்கன் மகன் நரசிங்கன் அல்லது பாலசிங்கன் சிம்மாசனம் ஏறிய போது ஜெயத்துக்கவரராஜா என அழைக்கப்பட்டான். இவன் காலத்தில் சோழ நாட்டிலிருந்து வந்த அந்தகக்கவி - வீரராகவன் ஜெயதுங்கராஜாவை தனது கவி மூலம் யாழில் வாசித்து, அரசனை மகிழ்வித்ததற்குப் பரிசாக 'மணற்றி' என்னும் தனது தந்தை ஆண்ட குடாநாட்டுப் பிரதேசத்தை அழியாத நன்கொடையாகக் கொடுத்து ஆளும படி அனுப்பினான். கதிரமலை அழிவுற்றிருந்தாலும் புத்தசமயிகள் அங்கு இருந்ததாலும் குடாநாட்டின் மேற்குப் பகுதியான பண்ணைத் துறைக்கு அருகில் தனது தலைநகரை அமைத்து தனது உறவினரான பலவகைப் பாணர்களை வட தேசத்திலிருந்து அழைத்து வந்து குடியேற்றினான். இதனால் இவன் நகரம் - யாழ்ப்பாணர் இடம் - யாழ்ப்பாணம் ஆனது. இந்த இடத்தை ஆய்வு செய்யின் இது புலப்படும். பாணர் என்பது ஒரு சாதிப்பெயர். பாணர் பலவகை. இவர்கள் இசைக் கலைஞர்கள். இந்தியாவுக்கான கடல் வழிப் பயணமும் இதனால் யாழ்ப்பாணம் ஊடாகச் செல்வதும் வழக்கமானது. எனவே சாதிப்பெயர்களைத் தெருக்களுக்கு மாற்ற விரும்பும் மாநகரசபை - யாழ்.பாணர்

**அவற்றை மாற்றுவது வரலாற்றுத் திரிபாகும்**

நகரை, குடாநாட்டை எப்படி மாற்றப் போகிறார்கள்?

'யாழ்ப்பாணக் குடியேற்றம்' என்ற நூலில், இங்கு குடியேற்றம், சாதிகளின் அடிப்படையில் உருவானது என்று சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் மகன் முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார். இதில் ஓரளவு உண்மையுண்டு. இதை எப்படி மாற்றுவது? எவராலும் தீர்மானிக்க முடியாதது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆற்று ஓரமாகவும், குளங்களைச் சுற்றியும் குடியேற்றங்கள் வந்தன. இங்குள்ள குளங்கள், குடியேறிய இடங்களின் பெயர்களை யாழ்.மாநகர சபையால் மாற்ற முடியுமா?

எத்தனையோ குளங்கள், ஆறுகள், ஊர்களின் பழந்தமிழ்ப் பெயர்கள் புத்தசமயத்தவரால், சிங்களவரால் ஈழத்தில் மாற்றப்பட்டு விட்டன. இதனால் தமிழர் வரலாறும் பெருமளவு சிதைந்து விட்டது.

சாதி என்பது இல்லை. ஆனால் தொழில் என்பது உண்டு. கொல்லனும், தச்சனும் கலப்பை செய்து கொடுக்காதுவிடின் வேளாளன் என்ற சாதி எப்படி வரும்? இதில் உயர்ந்தவர் யார்?

சாதிகள் இல்லையடி பாப்பா, தாழ்வு, உயர்வு சொல்லல் பாவம், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றெல்லாம் மதிப்பிற்குரிய சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளார். இதற்கமைய உயர்வு, தாழ்வு சொல்லலே பாவம் அல்லது மனித பண்பு அற்றது.

சென்ற இருபது ஆண்டுகளாக ஈழத்தமிழ் மக்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் இடப்பெயர்வு, புலப்பெயர்வு என்று ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வன்னிப் பெருநிலப் பரப்பிலும் நீர் வளங்களைப் பொறுத்துப் பெருங்கிராமங்கள் உருவாகின. இவை ஒவ்வொன்றும் அக்கிராம மக்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் அங்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாகவே கிராமத்தை அமைத்து வாழ்ந்தனர். ஆனால் சில பொருள்கள் உதாரணமாக உப்பு, உடுபுடைவை, ஆடம்பர அழகு சாதனங்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன.

பிரித்தானியா அல்லது மேற்கு ஐரோப்பிய நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்கும் தொழில்சார் சாதிகள் இருந்தன. இங்கெல்லாம் பெருங்கிராமங்கள் (Country Borough, Berg) என்ற வகையிலான கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு பல வித தொழிலாளரையும் தன்னகத்தே கொண்டிருந்தன. தொழில்சார் சாதிகளாகவே அவை அமைந்தன. ஆனால் கைத்தொழில் வளர்ச்சி கண்டபின் பாரம்பரியத் தொழில் முறை அழிந்து தொழிற்சாலைகள் பெருகின. இதனால் முன்னைய அமைப்பு அழிந்து தொழிலதிபர்கள் பணக்காரர் என்றும், தொழிலாளிகள் ஏழைகள் என்றும் இருவகை வகுப்பினர் உருவாகினர். இவர்கள் இருபகுதிக்கும் இடைப்பட்ட உழைப்பாளிகள் மத்திய வகுப்பினராகினர். எனினும் இங்கிலாந்தை எடுத்துப்பார்த்தால் அங்கு சாதிப் பெயர் ஒரு வகையில் தொடருகிறது - உதாரணம் - Goldsmith, Silversmith, Barber, Thatchar. யாழ். குடாநாட்டில் மடப்பம் என்பது போன்று பிரித்தானியாவில் Manonial system என்றும், ஐரோப்பாவில் Villa அல்லது Vila system என்றும் அக்காலத்தில் பெருங்கிராமங்கள் இயங்கின.

சாதி அமைப்பு முறையைப் பற்றி அலட்டிக்கொள்பவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டிய தென்னவெனில்-

(1) சமூகச் சிக்கல்களை எண்ணி ஒரு சாதி அதிலிருந்து விலக விரும்புவதில்லை. உதாரணமாக ஒரு தட்டான் மறுபகுதி உயர்ந்த சாதி என்று தெரிந்தாலும் அவர்களுடன் விவாக சம்பந்தம் செய்ய விரும்புவதில்லை. ஏனெனில் தமது தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில் இரகசியங்கள், நுட்பங்கள் பிற சாதியில் உள்ளவர்கள் உள்ளே வந்து குழப்பிவிடுவார்கள் என்பதால் அவர்கள் உயர்சாதியென்றாலும் அதனுள் விவாகம் செய்ய விரும்புவதில்லை.

(2) சமய ரீதியாக சாதியில்லை என்று கூறும் புத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் எல்லாவற்றிலும் சமூக ரீதியாக சாதி அமைப்பு உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது.

(3) ஒவ்வொரு சாதியிலும் பல உப பிரிவுகள் உண்டு என்பதை சாதியைப் பற்றிப் பிரஸ்தாபிப்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இப்பிரிவுகள் தமக்குள் உயர்வு தாழ்வு பேசுகின்றதோடு திருமணங்களும் செய்வதில்லை.

இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களினால் ஏற்பட்ட தாக்கம், சாதி என்ற கட்டுக்கோப்பை உடைத்து விட்டது. உதாரணமாக:-

(1) 1930ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சர்வசன வாக்குரிமை முறை.

(2) 1940ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட இலவச மருத்துவ சேவைகள்.

(3) 1946ஆம் ஆண்டு வந்த இலவசக் கல்விமுறை.

(4) 1948ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட போக்குவரத்து வசதி.

(5) 1951ஆம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சி, சாதிப்பாகுபாடு, சிறுபான்மை இனத்திற்குச் சாபக்கேடு என்று கூறிப் பல நடவடிக்கைகளை எடுத்தமை.

(6) 1960இல் மேற்படி கொள்கையின் அங்கமாக சைவ ஆலயங்களை சகலருக்கும் திறந்து விடுவது என்பது வெற்றி அளித்தது.

(7) 1960இல் இருந்து மாற்றம் பெற்ற பொருளாதாரத் திட்டங்கள்.

(8) 1960இன் பின்னர் வந்த மலிவு விலை வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள்.

(9) 1980இல் இருந்து ஈழத்தமிழ் மக்களின் இடப்பெயர்வுகளும், புலப்பெயர்வுகளும்.

மேற்குலக நாடுகளில் சாதியில்லை என்று கூறிக்கொண்டாலும் ஏதோவகையில் பாகுபாடு காட்டப்படுகிறது என்பதை அறிய முடியும். சாதி அல்லது தொழில் பெயர்கள் தொடர்கின்றன. உதாரணம் தட்டான் - Goldsmith, தச்சன் - Carpenter, Thatcher, அம்பட்டன் - Barber.

தற்பொழுது ஒவ்வொரு சாதியும் செய்த தொழிலின் பெரும் பகுதியை இயந்திரங்கள் செய்கின்றன. எனவே பழைய தொழில்நுட்ப இரகசியம் என்பது தளர்ந்துவிட்டது.

தொழில்தான் சாதிப்பெயர் என்றால், தொழில் பெயரைச் சிறிது நவீனமயப்படுத்தலாம். உதாரணம்:-

தட்டான் - பொற்கொல்லன், நகைக்கடை முதலாளி.

வண்ணான் - சலவைத் தொழிலாளி, சலவைக்கடை முதலாளி.

அம்பட்டன் - சிகை அலங்காரத் தொழிலாளி, கடை முதலாளி.

நளவன் - சீவல் தொழிலாளி.

கரையான் - கடற்றொழிலாளி.

தமிழரிடையே உள்ள சாதிகளைப் பற்றி அறிய விரும்பின்

(1) Caste system in N.W. India and among the Tamils of South India and Ceylon, Cambridge University Pamphlet series No.4 - Contribution by Mr. Barko Jaffna College and others.

(2) Caste system of Tamils in Ceylon - H.W.Tambiah QC

சாதிப் பெயர்கள், இடப்பெயர்கள் தோம்பு உறுதிகளுடன் தொடர்புடையவை. இவற்றையெல்லாம் மாற்றுவதென்பது இலேசான விடயமல்ல. அத்துடன் பயனற்ற வேலையும் கூட.

## வரலாற்று முறிவுகள்

ஈழத்தில் இருந்த பல ஊர்ப் பெயர்கள் மற்றும் ஆறுகள், குளங்களின் பெயர்கள் புத்த, சிங்கள எழுத்தாளர்களாலும், ஆட்சியாளர்களாலும் மாற்றப்பட்டதால் பழந் தமிழர் வரலாற்றில் பல முறிவுகள் ஏற்பட்டு விட்டன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஆட்சியாளர்கள் போக்குவரத்து வாய்க்கால்கள், வீதிகளை அமைத்து கிராமங்களின் எல்லைகளை மாற்றும்படி ஆனது. இவற்றுடன் கலாசாரக் குழப்பமும் வந்தன.

கட்சி அரசியல் என்பது ஒரு ஜனநாயக ஒழுங்குமுறை. இது ஒரு

சட்டத்தரணி கள்ளயூர்
கனக. நடராஜா

புனிதமான தேவைப்பாடு. ஆனால் அரசியல் கட்சிகள் ஒன்றை ஒன்று தீண்டத்தகாத சாதியென்று நடந்து கொள்கிறார்கள். பத்திரிகைகளில் திட்டித் தீர்க்கிறார்கள். சேவை மனப்பான்மையுடன் சுமுகமான தீர்வைக் காண முயற்சிப்பதில்லை. தமது கட்சிதான் எல்லாவற்றையும் சாதித்தது என்று காட்ட முனைகின்றனர். எனவே சாதி என்பது அரசியல் கட்சியுள்தான் இருக்கிறது. அரசியல் கட்சிகள் இல்லாது ஆணையாளர் வெறும் மாதச் சம்பளத்துடன் மக்களுக்கு எல்லாச் சேவையையும் செய்து வந்தார் என்பதை மறுக்க முடியாது.

யாழ்ப்பாண மாநகர சபை பழைய கதையைப் புதிய முறையில் எழுததெண்டிப்பது பயனற்றது.

இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்துள் வட மாகாணம் பல படையெடுப்புக்களால் சிதையுண்டு, புதையுண்ட தொல்பொருள்களைக் கொண்டுள்ளது. அரசியல் இலாபத்திற்காக குளங்கள், போக்குவரத்து வீதிகள், ஊர்கள் என்பனவற்றின் பெயர்களை மாற்றுவது பல்கலைக்கழக ஆய்வாளர்களின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதாகும்.

தற்போதைய போரினால் சலித்துப் போன மக்கள் கேட்பது உதவி. ஒடுக்கப்பட்ட, வறுமைப்பட்ட மக்கள் கல்வி வசதி, சிறுதொழில் முயற்சி வசதி, வீடு, சுகாதார வசதி என்பனவற்றையே எதிர்பார்க்கிறார்கள். பெயர்மாற்றம் என்பது ஒரு கண் துடைப்பு வேலை என்பதை இன்றுள்ள மக்கள் அறிவர். ★

> இலக்கிய கலாநிதி பண்டித மணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் நூற்றிரண்டாவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரமே!

"எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும், எத்துணையுந் தெவிட்டாது தித்தித்த முறுாறும் அதியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணம்"

கந்தபுராணத்துக்கு அழகியதொரு வரைவிலக்கண்த்தை மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார், நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள்.

### கந்தபுராணம்

இனிமையும் பெருமையுங் கொண்ட கந்தபுராணத்தை யாவரும் படித்து இன்புறத்தக்க வகையில் வசன நடையில் எழுதி வெளியிடும் பணியில் ஈடுபட்டவர் நாவலர் அவர்கள். குறித்த கந்தபுராண வசனநூலை 1981 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் மறுபதிப்புச் செய்தனர்.

இந்நூலுக்கு பண்டிதமணி அவர்கள் எழுதிய அணிந்துரையில் -

"கந்தபுராணம் கம்பராமாயணத்துக்கு ஒரு நூறாண்டு முந்தியது. சுப்பிரமணியக் கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளியது; திருமுறை வரிசையில் போற்றுந்தகைமையது.

கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமாநகரமேயாயினும், அதனைப் பிள்ளைமைப் பருவத்திலிருந்தே பேணுகிறவகையிற் பேணி வளர்த்தெடுக்கும் தவவிசேடம் படைத்தது; ஈழம்' சிறப்பாக யாழ்ப்பாணம்.

"ஈழத்தில் கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில், சந்நிதிவிரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராண படனம் நடத்தும் முறை வேறு எங்குங் காணாதது" - என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

### யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம்

பரிசாகப் பெற்ற மணற்றியை (யாழ்ப்பாணம்) ஆளத் தொடங்கிய யாழ்ப்பாடி பலரையும் குடியேற்றினான். அவ்வாறு குடியேறியவர்களில் ஒருவரே கச்சிக் கணேசையர் அவர்கள். கந்தபுராண ஆசிரியரான கச்சியப்பசிவாசாரியாரும் கச்சிக் கணேசையர் அவர்களும் ஒன்றாகப் படித்தவர்களாகலாம். கந்தபுராண அரங்கேற்றத்தில் பங்குபற்றியுமிருப்பார். கணேசையர் ஊடாகக் கந்தபுராணமும் யாழ்ப்பாணத்தில் குடியேறியது.

பிரசித்தி வாய்ந்த யாழ்ப்பாணம் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனத்தைக் கச்சிக் கணேசையர் முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார் என்பது வரலாறு.

### சைவர்கள்

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்கள். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவர்கள். அவர்கள் வழிபாடு செய்யும் இடங்கள் சிவாலயங்கள். சைவர்களின் மூலாதாரமான ஆலயம் திருச்சிற்றம்பலம் - சிதம்பரம். சிவாலயங்களில் பூசை வழிபாடுகளை மேற்கொள்பவர்கள் சிவாசாரியார்கள் என்பதே சான்றோர் கருத்து. சைவ அபிவிருத்தியின் பொருட்டு சைவ சபைகள், மன்றங்கள் ஏற்படலாயின. யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவ சபைகளில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மிக மிகப் பழமையானது.

சைவர்கள், சிவாசாரியர்கள், சங்கங்கள் சபைகளைச் சேர்ந்தவர்கள் கந்தபுராண படன அபிவிருத்திக்குக் காலாக இருந்தார்கள். அரியாலைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமான கந்தபுராணபடனம் ஈழத்தில்- விசேடமாக யாழப்பாணத்தில் உள்ள சிவாலயங்களிலும் பரவத் தொடங்கியது. சுப்பிரம்ணிய சுவாமி கோயில்களில் கந்தபுராணபடனத்துக்குத் தனி இடம் இருந்தது.

கந்தபுராண படனம் பிரசித்தி வாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் நீண்ட காலமாக நடைபெற்றுவருவதை யாவரும் அறிவர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களைக் கவி நயச்சக்கரவர்த்தி என்றும், நாவலர் பெருமான் அவர்களைஉரைநயச்சக்கரவர்த்தி என்றும் பாராட்டுவார்கள். 1872 இல்



நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற கந்தபுராண படனத்தில் நாவலர் பெருமான் அவர்களுக்கும், வித்துவசிரோமணி அவர்களுக்கும் கோயிலார் விசேட இடம் அளித்தார்கள். சூரனமைச்சியற் படலத்தில் வரும் பாடல்களை வித்துவசிரோமணி அவர்கள் நன்றாக வாசிக்க, நாவலர் பெருமான் அவர்கள் பயன் (உரை) சொன்ன அந்த இனிய காட்சியை "நாவலரும் புராண படனமும்" என்ற

## அதை இறுதிவரை நிலைநாட்ட உழைத்த பெருந்தகை பண்டிதமணி

கட்டுரையில் மிகவும் சிலாகித்து எழுதியுள்ளார் பண்டிதமணி அவர்கள்.

நமது நாட்டில் நாவலர் பெருமான் வழியில் கந்தபுராண படனம், திருவாதவூரடிகள் புராண படனம் ஆரம்பமாயின. புராணபடனம் நடைபெறும ஆலயங்களில் மக்கள் திரளுவார்கள். சைவாசார சீலர்களான பெரியவர்கள், கல்விமான்கள் வாசிக்கும் பொருட்டும், பயன் சொல்லும் பொருட்டும் கூடுவார்கள். பயன் சொல்பவர்கள், வாசிப்பவர்களுக்கு விசேட மரியாதைகள் இருக்கும். இவ்வாறான புராண படனங்கள் மூலம் மக்கள் சமய உண்மைகளை நன்கு அறிய வாய்ப்பு ஏற்பட்டது. இசையும் வளர்ந்தது.

ஆலயங்களில் பல்வேறு திருவிழாக்கள் இடம்பெறுவது வழக்கம். கொடியேற்றம், மஞ்சம், தேர், தீர்த்தம் முதலான விழாக்கள் முக்கியமாகக் கொண்டாடப்படும். அதுபோலக் கந்த புராண படனம் நடைபெறும் இடங்களில் அடிமுடிதேடு படலம், சூரபன்மன் வதைப்படலம், திருக்கலியாணப் படலங்கள் உள்ளிட்ட படலங்கள் விசேட படிப்பாக அமையும். விசேட வாசிப்புக்காரர்கள், விசேட உரைக்காரர்கள் அழைக்கப்படுவார்கள். ஆலய மண்டபத்தில் பக்தர்கள் நிறைந்து இருப்பார்கள்.

### பண்டிதமணியின் பயன்

பௌராணிகள் நிறைந்த பிரதேசம தென்மராட்சி. தனங்கிளப்பு அப்பிரதேசத்தில் ஒரு கிராமம். அங்கு எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரைக் 'காரைத்தூ விநாயகர்' என்று அழைப்பர். தனங்களப்பு, பண்டிதமணி அவர்களது தாயாரது ஊர். தனங்களப்பு காரைத்தூ விநாயகா ஆலயத்தில் கந்தபுராண படனம் நீண்டகாலமாக நடந்துவருகிறது. அந்த ஆலயத்தில் பன்னிரண்டு வயதிலேயே கணபதிப்பிள்ளை (பண்டிதமணி) சிறப்பாகப் பயன் சொன்னதாகக் கச்சாய்ப் புலவர் சின்னையா அவர்கள் 09.08.1969 இல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வழக்கப்படி காப்புச் செய்யுள்கள மூன்றும் நானே சொன்னேன். படிப்பு நடந்தது. (சூரபன்மன் வதைப்படலம்) அப்பொழுது அந்த ஆலய எல்லைக்குள் ஆக நான்கு பேர்கள் மாத்திரந் தான் மனிதர்கள் இருந்தார்கள். ஒன்று நான்; மற்றவர் வாசிப்பவர்; அடுத்தவர் கோயில் முகாமையாளர்; இன்னுமொருவர் அவர் மெல்லிய சிவலை பொடியர். படிப்புக் கேட்கிற கட்சியைச் சேர்ந்தவர் அந்தச் சிவலைப் பொடியர் ஒருவருந்தான். நான் கருத்துச் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது எனக்கு வயது பதினான்கு; வாசித்தவருக்கு வயது பதினைந்து. புராணப் படிப்புக் கேட்ட பொடியருக்குப் பன்னிரண்டு தானிருக்கும். சிதம்பரப்பிள்ளை இனி நீர் வந்து கருத்துச் சொல்லும். பொடியர் வாசிக்கட்டும் - என்றேன்.

"இல்லை நான் வாசிக்கிறேன்; பொடியர் பயன் சொல்லட்டும்" என்றார். நான் எழும்பினேன். பொடியர் விரைவாக வந்து நானிருந்த இடத்தில் இருந்தார்.

ஆசிரியமணி
அ.பஞ்சாட்சரம்

பாட்டிலே சொற்களுக்குக் கருத்துத் தெரியாமையால் அவைகளை விட்டும், இல்லாத கருத்தைச் சொல்லியும் சரிக்கட்டுகிற பயன்காரர்களை எனக்குத் தெரியும். பொடியரிடத்தில் அந்தப் பண்பு துளிகூட இல்லை. சரியாகப் பயன் நடந்தது. இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் தனங்களப்பு விநாயகர் ஆலயத்தில் சந்தித்த அந்த மெல்லிய சிவலைப் பொடியர் தான் இன்று பண்டிதமணியாக விளங்குகின்றார்"- என்கின்றார் கச்சாய்ப்புலவர் சி.சின்னையா அவர்கள்.

இளமைப் பருவத்தில் இருந்து இயற்கை எய்தும்வரை யாழ்ப்பாணக கலாசாரம் கந்தபுராண கலாசாரமே என்பதை நிலை நாட்ட உழைத்த பெருமை பண்டிதமணி அவர்களையே சாரும். பண்டிதமணி அவர்களது கந்த புராணம் பற்றிய சிந்தனைகள் நூல் உருவம் பெற்றுள்ளன. 1959 இல் கந்தபுராண கலாசாரம் என்ற நூலும், 1960இல் கந்தபுராண போதனை என்ற நூலும் வெளிவந்தன.

ஆறு காண்டங்களைக் கொண்டது கந்தபுராணம். தக்ஷ கண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் எழுதிய உரையைநூல் வடிவம் பெறச் செய்த பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம் 25.01.1967 புதனன்று கோலாகலமாக அங்கு வெளியீடு செய்தது. 'கந்தபுராணம் தக்ஷ காண்டம்' உரைநூல் வெளியீட்டு விழா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரு விழாவாகும். பண்டிதமணி அவர்கள் இலக்கிய கலாநிதியானதற்கான கால்கோள் விழாவாகவும் இவ்விழா அமைந்தது எனலாம்.


# பாத்தீனியம்
## அழிக்கத்தவறின் தண்டனை!

உங்களது பயிர்களிடையே அல்லது தோட்டங்களில் பாத்தீனியம் களை காணப்படுமாயின் அது தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

- 1-6 மாதங்கள் வரை சிறைவாசம்
- ஒரு இலட்சம் வரை தண்டப்பணம்



## ஆபத்தான பாத்தீனியம் களையை அறிந்து கொள்ளுங்கள்

- செவ்வந்தியின் இலையை ஒத்தது
- ரோமங்கள் காணப்படும்
- வெண்ணிறமான சிறியபூந்துணர்களைக் காணலாம்

## கண்டவுடன் அழிக்கவும்

- உடனடியாக பிரதேசத்தின் விவசாயப் போதனாசிரியருக்கு அறிவிக்கவும்
- கிளைபோசெட் அல்லது 2-4D களைநாசினியை விசிறவும்
- தொடர்ந்தும் இதனை கட்டுப்படுத்தவும்
- பிடுங்கி எரித்துவிடவும்

மேலதிக விபரங்களுக்கு: பயிர்ப் பாதுகாப்புச் சேவை
விவசாயத் திணைக்களம், கன்னோருவை, பேராதனை.
தொலைபேசி இல: 08-388316

# 'மைற்' நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த

**தேங்காயில் ஏற்படும் மைற் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள் எனும் தலைப்பில் கடந்த மே மாதம் 30ஆம் திகதிய 'கமமும் புலமும்' பகுதியில் வெளியான தொகுப்பின் எஞ்சிய இறுதிப் பகுதி இன்று வெளியாகின்றது. மைற்நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளில் சில குறித்து இந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்படுகின்றது.**

உலகில் 53நாடுகளில் செய்கை பண்ணப்படும் தென்னை மரமானது இலங்கையில் 4 லட்சத்துப் பத்தொன்பதாயிரம் ஹெக்டேயரில் செய்கை பண்ணப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் 10ஆயிரத்து 29 ஹெக்டேயரில் செய்கை பண்ணப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட விடயம் மக்கள் தகவலுக்காகத் தரப்பட்டாலும் தற்பொழுது குடாநாட்டில் தென்னைச் செய்கை பெரு வீழ்ச்சி அடைந்துள்ளது. தப்பிப் பிழைத்திருக்கும் தென்னைகளில் சிலந்திச் சிற்றுண்ணியின் தாக்கம் மிக மோசமாக உள்ளது. இவ்வாறான காரணங்களால் நாங்கள் தேங்காய்களுக்கு தென்பகுதியை. அல்லது வெளிநாடுகளை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



மைற் நோய்த் தாக்கத்துக்குள்ளான தேங்காய்கள்

## விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம்

பண்டைக்காலம் தொடக்கம் அன்றாட உணவுத் தேவை உட்பட பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த தேங்காய் எண்ணெயைக் கூட, அதில் 'கொலஸ்ரோல்' இருக்கிறது என்று கூறி மரக்கறி எண்ணெய் உற்பத்தியாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

**மைற் சிற்றுண்ணி 10 நாளில் ஒரு சந்ததி என்ற ரீதியில் 30 நாள்களில் 3 சந்ததியை உருவாக்குகின்றது.**

இவ்வாறான நிலையில் கிடைக்கும் சிறியளவான தேங்காய்களைக் கூட இந்த சிலந்திச் சிற்றுண்ணியானது இல்லாமல் செய்துகொண்டு வருகிறது. எனவே சமூகம் விழித்தெழ வேண்டிய காலம் வந்துவிட்டது. சமூகப் பங்களிப்பின் மூலமே இந்தப் பூச்சித் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். எனவே 'மைற்' நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளில் சிலவற்றை இக்கட்டுரையில் பார்ப்போம்.

### உள்ளி + வேப்பெண்ணெய் குழம்புப் பாவனை

**தேவையான பொருள்கள்**

✪ இக்குழம்புக் கரைசலைத் தயாரிப்பதற்கு முதலில் 50 கிராம் வெள்ளை வெண்காயப் பூடு;

(12-15 உள்ளிப்பல், தோலை அகற்றிய பின்னர் அம்மியில் அல்லது பிளண்டரில் நன்றாக அரைத்து எடுக்கவேண்டும்.)

✪ வேப்பெண்ணெய் 50 மில்லி லீற்றர்;

(ஒரு சீசா குப்பி, இதன் விலை 15-20ரூபா, சந்தைகளில் அல்லது மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.)

✪ வேப்பம் பருப்பு; (100 கிராம் பருப்பை கோது அகற்றிய பின்னர் நன்றாக அரைத்து அதை நீருடன் கலந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.)

✪ 5 தொடக்கம் 10 கிராம் சன்லைற் சோப் அல்லது ஒரு தேக்கரண்டி 'சேர்வ் எக்செல்' சலவைப் பவுடர், ஒரு சிறிய பக்கற் அல்லது வசதிப்படி லாலா சோப்; (சலவைக்குப் பயன்படுத்தும் எந்த சோப்புக்களையும் பயன்படுத்தலாம்.)

சோப் பயன்படுத்துவதன் நோக்கம், எண்ணெயானது நீருடன் கலக்க முடியாத ஒன்றாகக் கலவை தயாரிக்கும் போது எண்ணெய்த்துளிகளை ஒன்றுடன் ஒன்று சேராமல் பிரித்து வைக்கும் தன்மை சோப்புக்கு உண்டு.

**தயாரிப்பு முறை**

அரைத்து எடுத்த வெள்ளை வெண்காயம், சோப், வேப்பெண்ணெய் என்பவற்றை ஒரு லீற்றர் அளவுக்கு நீருள்ள பிளாஸ்ரிக் வெறுச் சோடாப் போத்தலில் போட்டு நன்றாகக் குலுக்கவேண்டும்.

**பயன்படுத்து முறை**

இக்குழம்புக் கரைசலை பாதிக்கப்பட்ட குரும்பைகள் நன்றாக நனையத்தக்கவாறு பூச வேண்டும். அல்லது தெளிக்க வேண்டும். அத்துடன் பாளைகளும் நனையத்தக்கவாறு பூசவேண்டும். இதை 15 நாளைக்கொரு தடவை செய்தல் அவசியம். பாளைகள் விரிந்த பின்னர் தனித்தனியாகவும் ஒவ்வொரு பாளைகளுக்கும் இக்குழம்புக் கலவையைப் பூசலாம்.

வசதிப்பட்டால் உயரம் குறைந்த மரங்களுக்குத் தெளிகருவியைப் பயன்படுத்தி (நன்றாக வடித்த கலவையை) குரும்பைகள், பாளைகள் நனையத்தக்கவாறு விசிறலாம். நீளமான குளாய் பொருத்தப்படின் சற்று உயரமான மரங்களுக்கும் விசிற முடியும்.

எண்ணெய், உள்ளிச்சாற்று ஆகியவற்றின் தன்மை பூச்சியின் அசைவுகளை, நகர்வுகளைக் கட்டுப்படுத்தும். இளமையான குரும்பையில் பூசப்படும் போது இலகுவாக அதனுள் சுவறக்கூடியதாக இருக்கும். இந்த முறையும் சூழலுக்கு அச்சுறுத்தல் இல்லாத முறையாகும்.

**இரசாயன நாசினி தெளிப்பு (CHEMICAL INSECTICIDE SPRAY)**

இரசாயன கிருமி நாசினிவகைகள் பாவிப்பதனால் சுற்று சூழலுக்கும் உயிரினங்களுக்கும் ஏற்படும் தீமைகளைக் கருத்திற் கொண்டும், இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்குமான நடவடிக்கைகளில் உலகின் பல பாகங்களிலும் உள்ள சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றன.

எனினும் குறிப்பிட்ட சில பீடைகளின் பெருக்கத்தினால் ஏற்படும் பாரிய சேதத்துக்கு (EPIDEMIC DAMAGE) இரசாயன கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். கிருமிநாசினி விசிறும் போது தகுந்த முன்னெச்சரிக்கை பாதுகாப்புகள் செய்ய வேண்டியது அவசியம்.

**நீரில் கரையக்கூடிய சல்பர் 80%**

இது எல்லா இரசாயன கிருமி நாசினி விற்பனைக் கடைகளிலும் பெறலாம். தற்போது வசதிகருதி சொரியாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

குரோட்டன், றோசா பூச்செடிகள் வளர்ப்பவர்கள் கட்டாயம் வீடுகளில் வைத்திருக்க வேண்டிய ஒன்று இதுவாகும்.

இந்தத் தூளில் 5 - 10 கிராம் (1-2 தேக்கரண்டி தூளை) ஒரு லீற்றர் நீரில் கரைத்து பாளைகள், குரும்பைகளுக்கு கீழே நின்றவாறே தெளிக்கலாம். இப்படித் தெளிப்பதாயின் கலவை கூடுதலாகத் தேவைப்படும். எனவே மேலும் 2 கரண்டி தூளைச் சேர்த்து நீரின் அளவைக் கூட்டி கீழே நின்றவாறே வீசித் தெளிக்கலாம். ஒரு தென்னைக்கு இந்த முறையில் தெளிப்பதானால் 4 லீற்றர் கரைசல் தேவைப்படும். இதன் மூலம் தென்னையின் வட்டுப் பாகங்கள் நனையக் கூடியதாக இருக்கும்.

நன்றாக வடித்த கரைசலை கைத்தெளிகருவி அல்லது 'நப்சக்' தெளிகருவி மூலமும் தெளிக்கலாம். அனேகமாக கைத்தெளி கருவியினால் அடைப்பு ஏற்பட இடமுண்டு. கரைசலை வெற்றுச் சோடாப் போத்தலில் எடுத்துச் சென்று குரும்பைகள், பாளைகள் நன்றாக நனையும் படியும் விசிறலாம். நீரின் அளவைக் குறைத்து பிறஷ் (Brush) மூலமும் பூசி விடலாம். சல்பர் 80% தூள் பின்வரும் பெயர்களிலும் கிடைக்கும்.

I கேனமைற் 80%, II லங்கெம் சல்பர், III காக்றோஸ் சல்பர், IV குமுளூஸ் டி.எவ், V மக்சல்.

**காபோபியூறான் குருணல்3%**

இது குறேற்றர், பியூறடான் போன்ற வர்த்தகப் பெயர்களில் விற்பனையாகின்றது. கடியெறும்பு, கறையான், செவ்வண்டு, கருவண்டு உட்பட பல பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த வல்லது. இதுவும் வீட்டில் இருக்க வேண்டிய, ஒரு நாசினியாகும்.

இந்தக் குருணல் மருந்தில் ஒரு மேசைக்கரண்டி மருந்தை 1-2 லீற்றர் நீரில் போட்டு ஊறவிட்டு மறுநாள் நன்றாகக் குலுக்கி கரைசலாக்க வேண்டும். பின்னர் அதனை சீலைத் துணியினால் வடித்தெடுத்து தெளிகருவியினுள் விட்டு குரும்பைகள், பாளைகள் நன்றாக நனையும் வரை தெளிக்க வேண்டும்.

இது தாவரப் பாகங்களினால் உறுஞ்சப்பட்டு கடத்தப்படுவதால் 21-40 நாள்களுக்கு மருந்து தெளிக்கப்பட்ட தாவரத்தில் நச்சுத்தன்மை இருக்கும். இதை 1 மாதத்துக்கொரு தடவை விசிற வேண்டும்.

மருந்துக்கடைகளில் மருந்து வாங்கும் போது இலவசமாக கையுறை தருவார்கள் அல்லது நீங்கள் அவற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதை முறையாக அணிந்து கொண்டே கிருமி நாசினிகளை விசிற வேண்டும்.

குருணல் நாசினியை பாளை இடுக்குகள் குருத்துக்களிலும் தூவி சிறிதளவு நீரினால் நனைத்து விடலாம் இது கருவண்டுத் தாக்கத்துக்குச் சிறந்த முறை. போத்தலில் எடுத்துச் சென்றும் பாளைகள், குரும்பைகளுக்குத் தெளிக்கலாம்.

மேலும் பின்வரும் நாசினிகளைப் பயன்படுத்தியும் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

1. டைமிதியோ யேற் டயசினோன் (DIMETHOATE 400 G/LEC) காற்றோடெம்றோ
2. என்டோசல்பான் (ENDOSUL FAN)
3. செவின் - காபறில்
4. மெற்றாசிஸ்ரொக்ஸ்

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

போன்ற மருந்துகளில் 10 மில்லி லீற்றரை 1 லீற்றர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

மேற்கூறிய மருந்துகளில் 20-30மில்லிமீற்றர் எடுத்து 4.5 லீற்றர் நீரில் கலந்து மரத்தின் வட்டு நனையத்தக்கவாறும் தெளிக்கலாம். இத்துடன் 10 கிராம் சல்பர் தூளைத் கலந்தும் தெளிக்கலாம்.

மேற்படி மருந்துக்கலவை தெளிப்பதால் வட்டெலி, கருந்தலைப்புழு, கருவண்டு, செதில் பூச்சி பைப்புழு (Bagworm) மைற், கறையான், சிற்றெறும்பு, கடியெறும்பு, செவ்வண்டு போன்றவற்றின் தாக்கங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மருந்து தெளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்.


1. மரத்தில் இருந்து தேங்காய்கள் அகற்றப்பட்டிருந்தால் மருந்து தெளித்த 2மாதத்தின் பின்னரே மீண்டும் காய்களைப் பிடுங்கவேண்டும்.

2. மருந்து விசிறப்பட்டது என்ற பெயர்ப்பலகை மரத்தில் தொங்க விடப்படவேண்டும். அல்லது குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

3: தென்னையில் ஒருவகையான உயர் ரிபிக்கா இனமரங்களில் அயன் மகரந்தச் சேர்க்கை கூடுதலாக நடைபெறும். எனவே பாளை விரிந்தவுடன் ஆண் பூக்களெல்லாம் 15முதல் 20 நாள்களில் விழுந்து விடும் 21முதல் 23 நாளில் குரும்பட்டிகள் கருக்கட்டலுக்குத் தயாராக பின் பக்கத்தில் மதுவம் காணப்படும். இது வெண்ணெய் நிறமாகவும் முக்கோண வடிவில் விரிந்தும் காணப்படும். இக்கால கட்டத்தில் காலை 10 மணியில் இருந்து 3 மணிக்கிடையில் கருக்கட்டல் நடைபெறும். காற்றினால் அல்லது தேன் பூச்சியினால் காவி வரப்படும் மகரந்த மணிகளால் கருக்கட்டல் நடைபெறும். எனவே பாளை விரிந்தவுடன் மருந்து தெளித்தல் சிறந்தது. அல்லது பாளைவிரிந்து ஒரு மாதத்திலும் மருந்து தெளிக்கலாம்.

**கந்தையா தனிநாயகம்**
*Dip. in Agri.*
*தோட்ட முகாமைத்துவப் பகுதி பளை.*

அதேபோல Dwarf கட்டை இன தென்னைகளில் தன்மகரந்தச் சேர்க்கை கூடுதலாக நடைபெறும். செவ்விளநீர், மாலைதீவு ஆகிய இனங்கள் 3 வருடத்தில் காய்க்கும் இனங்களாகும். பாளை விரிந்து எட்டு நாள்களின் பின் குரும்பைகள் மகரந்த மணியை வாங்கக்கூடிய முறையில் குரும்பையின் பின் பக்கம் மதுவத்துடன், வெண்ணெய் நிறமாக முக்கோண வடிவிலும் விரிந்திருக்கும். இதேகால கட்டத்தில் ஆண் பூக்களும் பூக்காம்புகளில் பூத்திருப்பதைக் காணலாம். எனவே கூடுதலாக தன்மகரந்தச் சேர்க்கை மூலம் கருக்கட்டல் நடைபெறும். இந்த நிகழ்வு ஒரு மாதத்துக்குள் முடிவடையும். தேன் பூச்சிகள், காற்று மூலமும் மகரந்த மணி பரம்பலடைந்து சேர்க்கையுறும்.




1) வெளவால் 2) கறையான் 3) செவ்வண்டு 4) வட்டெலி 5) புறோமிகோதீகா 6) வெட்டுக்கிளி 7) கருவண்டு 8) நெற்றில் கிறப் புழு 9) கருந்தலைப்புழு.

இப்படிப்பட்ட மரங்களுக்கு பாளை விரிந்து 2 முதல் 3 நாள்களுக்குள்ளும், ஒரு மாதத்தின் பின்பும் மருந்து தெளிக்க வேண்டும். அதுவே சிறந்த முறையாகும்.

இடைப்பட்ட காலங்களில் குரும்பைகள் மகரந்த மணியைப் பெற திறந்திருக்கும் நிலையில் எண்ணெய்க் கரைசல், சல்பர் கரைசலை விசிறினால் கருக்கட்டல் தடைப்பட வாய்ப்பு உண்டு. எனவே வசதிப்படும் இடத்து பார்த்து அவதானமாகச் செய்யலாம்.

சில நேரங்களில் சில விடயங்கள் ஒரு நோக்கத்தை நிறைவு செய்யும் போது ஒரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. இவை தவிர்க்க முடியாததாகும்.

தென்னந் தோட்டங்களினுள் மா, தேசிமரங்கள் பயிரிட்டவர்கள் மருந்து தெளிப்பதற்கு கமநல சேவை நிலையம், விவசாயத் திணைக்களங்களில் உள்ளை விசை தெளி கருவிகளைப் பயன்படுத்த முடியும். ★

---

### மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர்

# மீசாலை வீரசிங்கம் ம. வித்கு 14 மாணவர்களே சமுகம்

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானபோது 14 மாணவர்களே சமுகம் அளித்திருந்தனர்.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள கொடிகாமம், மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலைகளை இணைத்து மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தை ஆரம்பிக்குமாறு ஏற்கனவே பணிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இணைந்த பாடசாலைகளுடன் முதன்முதலில் வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆரம்பமானபோது 14 மாணவர்களே சமுகமளித்திருந்தனர். (ம-173)

---

### தமிழ்க் கைதிகள் கொலைக்கு காரணமான

# பிந்துனுவெவ சம்பவம் குறித்து உயிர்தப்பியோரிடம் விசாரணை

## ஜனாதிபதி ஆணைக்குழு முடிவு

கொழும்பு,ஜூன்27

பிந்துனுவெவ தடுப்புமுகாம் மீதான தாக்குதலின் போது காயங்களுடன் உயிர்தப்பிய 8 தமிழ் இளைஞர்களும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிரதிநிதிகளே இவர்களிடம் விசாரணை நடத்தவுள்ளனர்.

தற்போது தெல்லிப்பழை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் விசாரணைகளுக்காக விரைவில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மேற்படி 8 இளைஞர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டுமென சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்டியாராய்ச்சி ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அதனை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

---

# இன்பருட்டியில் இளைஞன் கைது

இன்பருட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ஐஙரீங் கேஸ்வரனிடம் உறவினர்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி இரவு 10 மணியளவில் வீட்டுக்குவந்த படையினர் திருஞானசம்பந்தபிள்ளை திலகரூபன் (22வயது) என்ற இளைஞரைக் கைதுசெய்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆறு மாதங்கள் நிரம்பிய சணல் ஆட்டுக்கடாக் குட்டியோடு தாய் ஆடும் (பால் தரும் நிலையில்),45 நாள்கள் நிரம்பிய (ஆண், பெண்) நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- செல்வம், இல. 107,டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (89467)

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் **MD90** மொடல் 21, சிறுவர்களுக்கான கீரோ துவிச்சக் கரவண்டி, இரண்டு மிருதங்கம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- சுவாணி கிறிஸ்ரி, இல. **27/13**, புங்கன்குளம் வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (89468)

**EN** தொடர் இலக்கத்தை உடைய **A-50** கேம்பிரிச் கார் விற்பனைக்கு உண்டு. மோட்டார் சைக்கிள் மாற்ற விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:- **S.**அன்ரன், அளவெட்டி மேற்கு அல்லது **C.L.S,** வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (89469)

100 இரும்புக் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.தேவராசா (பந்தல் சேவை) இல.91, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (89474)

## தமிழ் இலக்கியம்

**O/L** மாணவர்களே! தமிழ் இலக்கியப் பாட நூல் இல்லையா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய இலக்கியக்கட்டுரைகள் நூலைப் படியுங்கள். 7 சிறுகதைகள் "பொருளோ பொருள்" நாடகம், "வீடற்றவன்" நாவல் ஆகியவற்றுக்கு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. (89413)

## வீடு உடன் விற்பனைக்கு

திருநெல்வேலி, கேணியடி வைரவர் கோயில் முகப்பு ஒழுங்கையில் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:-**521/12,** பருத்தித்துறை வீதி, நல்லூர். சனி, ஞாயிறு முழு நேரமும், கிழமை நாள்களில் பிற்பகல் 2.30 மணிக்குப் பின்னரும் சந்திக்கலாம். (89470)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம், (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (89191)

**Broiler, Cullbirds, Cockerels, Soup chicken** இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) (முத்திரைச் சந்தியடி, நல்லூர்) (89449)

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 71ஆம் ஆண்டில் பிறந்த சித்திரை முதலாம்பாதம்,கன்னிராசி, 2 இல் செவ்வாய் 34 கிரகபாவம் உள்ள டாக்டர் **M.B.B.S** மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1311, மே/பா உதயன். (89428)

## O/L கணிதம்

புதிய, பழைய பாடத்திட்டத்தில் **Distinction, Credit** பெறுபேறுடைய ஆண்டு 6-10 வரையும் ஆரம்பத்திலிருந்து **(Paper Class** வரை) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர். 85, சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்) திருநெல்வேலி. (89319)

## தவறிவிட்டது

தியேட்டர் ஒழுங்கை, இணுவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிறிலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (இல. 661104279**V**), வீசேட அ.அட்டை (இல. 0906018024) என்பன 25.06.2001 அன்று இணுவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 148,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (89463)

# தேசிய பாசறை 2001



கடந்த இரு தேசிய பாசறைகளிலும் அங்கே தமிழன் தலை குனிந்து நிற்கக் கூடாதென மாண்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, திரு.தவராஜா, திரு.ஜெகன், நிசாந்தன் தோழர் அனைவரும் உதவியதனால்தான் நாம் சிறந்த யாழ். மாவட்ட விருதுகளைப் பெற்றோம். தேசிய பாசறை 2001 காலியில் ஒகஸ்ட் மாதம் நடைபெற இருப்பதால் யாழ்.மத்திய மாவட்ட உத்தியோகத்தர்கள் கௌரவ அமைச்சரைச் சந்தித்தோம். 48 படைவீரர்களின் சிறந்த பங்களிப்புக்கு உதவ முன்வந்துள்ளமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆகவே கௌரவ அமைச்சரையும், நிசாந்தன் தோழரையும், ரவி தோழரையும் நாம் பாராட்டுகின்றோம்.

**- அதிபர்கள்,**
**உத்தியோகத்தர்கள்,**
**ஜம்போறிக் குழுவினர்,**
**பெற்றோர் குழுமச்சபை.**

திரு.க.அருந்தவராஜா,
*மாவட்ட ஆணையாளர்,*
*ஸ்ரீ லங்கா சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்* (89477)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14
-
01
-
1937



மறைவு
07
-
07
-
2000

## அமரர் வல்லி சின்னத்தம்பி

திதி: 27-06.2001

அன்பொழுகும் உங்கள் வார்த்தை நெஞ்சள்ளும்!
உங்கள் குணம், நேசமுள்ள உங்கள் மனம், உங்கள் குரல்
இன்னும் எம் காதுகளில் ஒலிக்கின்றன, எமக்கெல்லாம்
ஒளியாய் இருந்த நீங்கள் இன்று எங்களது
நினைவாலயம் ஆனீர்களே! உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம.

தற்காலிக முகவரி:-
***52/2,** வைமன் றோட்,*
*நல்லூர்.*

நிரந்தர முகவரி:-
*உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.*

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள். (89471)

# பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள்

வடமராட்சி, ஜுன்27

பருததித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு பாடசாலையின் பழைய மாணவிகள் சங்க கொழும்புக்கிளையினர் 45 ஆயிரம் ரூபா செலவில் பாண்ட் வாத்தியக் கருவிகளை வழங்கியுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக பாண்ட் வாத்தியக் குழுவுக்குத் தேவையான கருவிகளில் ஒன்றான 'சைட் றம்மை' பருத்தித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை செல்வி தில்லைநாயகி வேலுப்பிள்ளை பத்தாயிரம் ரூபா செலவில் வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார்.

6 ஆயிரத்து 50ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணங்களை பாடசாலையின் கனடா பழைய மாணவிகள் சங்கம் வழங்கியுள்ளது. (ம-173)

# தாச்சி இறுதி ஆட்டம்

வலி.வடக்கு,ஜுன்27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தாச்சி தேசிய விளையாட்டு முகாமையாளரும் சமூகவியல் துறைத்தலைவருமான கலாநிதி என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-86)

# நூலக கட்டடம் விரிவாக்கம்

யாழ்ப்பாணம்,ஜுன்27

மாணவர்களின் நன்மை கருதி கோண்டாவில் விவேகானந்தா நூலக கட்டடம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இரவல் வழங்கும் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் மற்றும் புதிய அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்கள் நூலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நூலக வாரம் ஒன்றை அறிவித்து பொதுமக்களிடம் இருந்து நூல்களை சேகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் விவேகானந்தா நூலகத்தின் நூலகர் இ.சுகுமார் தெரிவித்தார். (ம-6)

# தாய்மாருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்27

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் இரட்டைக் குழந்தைகளைப் பெற்ற குடும்பத் தலைவியரை எதிர்வரும் 3ஆம் திகதி காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க.சிவராஜாவை சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு தை மாதத்தின் பின்னர் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த குடும்பத்தினரின் விவரங்களைத் திரட்ட வேண்டியிருப்பதால் குறித்த தினத்தில் தவறாது அனைவரையும் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# தேர்முட்டி அமைக்கும் பணி

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பல ல்ட்சம் ரூபா செலவில் தேர்முட்டி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் தேர்முட்டி அமைக்கும் பணி முடிவடைந்ததும் அம்பாளுக்கான சித்திரத்தேர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-73)

# BRIGHTMAN

கல்வி நிலைய்ம்
பிறவுண் வீதி, யாழ்நகர்

O/L MATHS
PAPER CLASS

* வாரத்தில் 4மணித்தியாலம் வகுப்பு*.
* தனி ஒருபாட அனுமதி வழங்கப்படும்*

ஆரம்பம்:-
28-06-2001 வியாழன். 4.30 (89479)

# லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

(ஸ்தாபிதம் : 1925)

## சிறப்பு அனுமதி - 2001

மேற்படி மருத்துவக் கல்லூரிக்கான சிறப்பு அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வைத்திய பரம்பரையாயின் க.பொ.த.சாதாரண தரமும், அல்லாதோர் க.பொ.த உயர் தரமும் விண்ணப்ப தகுதியாகும்.

*முடிவு திகதி:10~07~2001*

பதிவாளர்,
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,
*127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (89481)

# நன்றி கலந்த நல்வாழ்த்துக்கள்

எமது கிராம மக்களின் சமூக, கலாசார, பண்பாட்டு, அறிவு, ஆளுமை மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு அவசியமான செயற்றிட்டங்களான-

* கற்பொக்கணை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலய புனர்நிர்மாணம்
* கலைமதி ஆரம்பப் பாடசாலை மழலைகளுக்கு விளையாட்டுப் பூங்கா அமைத்தல்
* ஆரம்பப் பாடசாலைக்கு நவீன தளபாட உபகரண வசதி அளித்தல்
* வீதிகள் புனரமைப்பு (பிரதேச சபையூடாக)



போன்றவற்றை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ள வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் மற்றும் இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு**

எமது உளம் கனிந்த, நன்றி கலந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



மேற்படி வேலைத்திட்டங்களின் முக்கியத்துவத்தை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூறிய வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர்

**திருமிகு.க.கமலசேகரன்**

**அவர்களுக்கும்**

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர்களது சேவைகள் மேலும் சிறப்புற, தொடர எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிர்வாகத்தினர்:**

**கற்பொக்கணை**
**ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயம்,**
**கலைமதி சனசமூகநிலையம், கல்விப் பூங்கா.** (89472)

உ

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்கள கரமான விஷு வருடம் ஆனித்திங்கள் 13ஆம் நாள் இன்று(27~06~2001) புதன்கிழமை காலை 10.47 மணி தொடக்கம் 11.48 மணி வரையுள்ள உத்தரம் நட்சத்திரமும் அமிர்த யோகமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

**எமது புதல்வன்**
**திருநிறை செல்வன்**
**பாரதிதாசன்**
**அவர்களுக்கும்**



**எமது புதல்வி**
**திருநிறை செல்வி**
**துயாபரணி**
**அவர்களுக்கும்**

பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டு திருகோணமலை ஸ்ரீ முத்துக்குமாரசாமி கோயில் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரண வைபவம் நடைபெறுகின்றது என்பதனை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மன மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

புதுமணமக்களை அனைவரும் மனமார ஆசீர்வதிக்கும் வண்ணம் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**தங்கள் நல்லாசிகளை நாடும்:**

திரு.திருமதி திருபாலசிங்கம்
**அந்திரான் டச் ரோட்,**
**சண்டிலிப்பாய்.**

திருமதி மங்கையர்க்கரசி தியாகராஜா
**அம்பாள் அகம், அந்திரான் டச் ரோட்,**
**சண்டிலிப்பாய்.** (89473)

ஐந்து மாதங்களாக அனுப்பிவைக்கப்படவில்லை

# காரைநகர் அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு

காரைநகர், ஜூன் 27

காரைநகர் அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துப் பொருள்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை எது விதமான மருந்து வகைகளும் இந்த ஆஸ்பத்திரிச்கு அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து வகையான மருந்து வகைகளுக்கும் இங்கு தட்டுப்பாடு நிலவுவதால், வெளிநோயாளர் பிரிவில் தினமும் சிகிச்சை பெறவரும் 80 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை—

மேற்படி ஆஸ்பத்திரிக்கென வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அராலிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியது. அது இதுவரை திருத்தப்படவில்லை. இதனால் இந்த ஆஸ்பத்திரிக்கு இரவு வேளைகளில் கொண்டுவரப்படும் அவசர நோயாளிகளை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதில் பெருஞ் சிரமங்கள் எதிர் நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இரவு வேளைகளில் இங்கு கொண்டு வரப்படும் அவசர நோயாளிகள் கடற்படையினரின் உதவியுடன் ஊர்காவற்றுறை மாவட்ட ஆஸ்பத்திரிக்கு படகு மூலம் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படும் நிலையே தற்போதுள்ளது.

நோயாளர்கள் இவ்வாறு நீண்டதூரம் பயணித்தே யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதால் கடந்த 3 மாதத்துக்குள் இரு நோயாளிகள் இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகரில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தரைவழிப் பாதை இருந்தும், அம்புலன்ஸ் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் இத்தகைய நிலையை எதிர்நோக்கவேண்டி உள்ளதாகவும், இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7-73)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சையில் 21 பேர் சித்தி

### வாய்மொழிப் பரீட்சை அடுத்த மாதம்

வலி.வடக்கு, ஜூன் 27

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் 21 பேர் சித்தியடைந்துள்ளனர்

இவர்களுக்கான வாய்மொழி மூலமான பரீட்சை அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளதாகச் சங்கச் செயலாளர் சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

செ. நிஷாந்தன் (யாழ்ப்பாணம்), சு. கோகுலன் (கொக்குவில்), தே. ஜெயதீபன் (மானிப்பாய்), நா. ஜனார்த்தன் (மானிப்பாய்), ம. பற்றிக் டிறஞ்சன்(யாழ்ப்பாணம்), சி. அருளானந்தம் (யாழ்ப்பாணம்), ம. மோகனதாஸ் (மானிப்பாய்), மா. முரளி (பருத்தித்துறை), க. கௌரிகாசன் (பருத்தித்துறை), க. சிவாகரன்(கொக்குவில்), ச. தவநேசன் (யாழ்ப்பாணம்), ப. பிரகலாந் (மானிப்பாய்), த. ஹரிஷானந் (அரியாலை), கு. பந்துலன் (நல்லூர்), யோ. விமலன் (கல்வியங்காடு), ச. சுரேஷ்மோகன் (சுண்டுக்குளி), கா. உமாகஜன் (உரும்பிராய்), பா. ஜெயரூபன் (மானிப்பாய்), ஞா. ஞானதயாளன் (கரவெட்டி), வி. சாரங்கன் (அல்வாய்), சி. கௌசிகன் (அல்வாய்).

(ம-86)

## இளைஞன் கைது

தென்மராட்சி ஜூன் 27

அல்வாய் இன்பருட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு1 1.30 மணியளவில் வீட்டில் நித்திரையில் இருந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இந்த இளைஞர் தாக்கப்பட்டதாகவும் —

அதனால் ஏற்பட்ட காயங்களுக்காக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞன் பின்னர் பலாலி ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டதாகவும் — மேலும் கூறப்படுகின்றது.

பிரஸ்தாப இளைஞனிடம் இருந்து 49 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டதாகப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

(உ-3-117)

## சிறுகதைத்தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடத்தும் 'மண்ணின் மலர்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மன்றத் தலைவர் அ. பௌநந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 13 மாணவர்களின் சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

வெளியீட்டுரையை கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும், மதிப்பீட்டு உரைகளை கலாநிதி க. குணராஜா, பேராசிரியர் எஸ். சிவச்சந்திரன் ஆகியோரும் வழங்குவர்.

சித்தர்அனவரதன், அபிறவன், குமுதன், இராகேஸ் கண்ணன், இராகவன், உடுவில் அரவிந்தன், தியாகு கணேஸ்ராஜ், சி. சிவாணி, வசந்தகுமார், தாட்சாயினி, பிரியா குணராஜா, நர்த்தனா, அருந்தவசீலன் ஆகிய எழுத்தாளர்களின் 'மண்ணின் மலர்கள்' என்ற இந்த மல்லிகைப்பந்தல்தொகுப்பை யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினர் வெளியீடு செய்கின்றனர். (ஐ)

## வலி. தெற்கு பிரதேச சபைக் கூட்டம்

வலிகாமம்தெற்கு, ஜூன் 27

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கூட்டம் இன்று புதன்கிழமை காலை பத்து மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் க. கமலசேகரன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதேச சபையால் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள், நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

(ம-152)

## காலாவதியான பொருள்கள் அழிப்பு

நெல்லியடி, ஜூன் 27

வடமராட்சிப் பகுதியில் உள்ள அல்வாய், நாவலடி வியாபாரிமூலை போன்ற இடங்களில் பல கடைகளிலிருந்து பாவனைக்கு உதவாத பிஸ்கட்வகை, இனிப்பு வகை, கன்டோஸ்கள், சோயாமீற் பைக்கற்றுக்கள் குரக்கன்மா, ஒடியல்மா பைக்கற்றுக்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை அல்வாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி. நகுலேஸ்வரன் தலைமையில் சென்ற மேலும் சில பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இவற்றைக் கைப்பற்றி முற்றாக அழித்தனர்.

(ம-109)

## ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் கழகம் ஏற்பாடு செய்துள்ள 'அகதிகளும் மனித உரிமை சாசனமும் — ஓர் ஆய்வு அனுபவப் பகிர்வு' என்ற தலைப்பிலான ஆய்வரங்கம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அரசியல் சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் அறிமுகவுரையையும், 'நான்' உளவியல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எம். போல் நட்சத்திரம் ஆய்வுரையையும் நிகழ்த்துவர்.

(ம-7-6)

## விவசாய அறிவுப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஜூன் 27

வலிகாமம் கல்வி வலய பாடசாலை 10, 11 ஆம்,தர விவசாய பாட மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட விவசாய அறிவுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கோட்டமட்ட எழுத்துப் பரீட்சைப் போட்டியில் பங்குபற்றி ஒவ்வொரு கோட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட முதல் ஐந்து மாணவர்கள் வலயமட்டப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

(ம-152)

## 187 ஆவது ஆண்டு நிறைவு தினம்

வடமராட்சி ஜூன் 27

மெதடிஸ்த மிஷனரிகள் இலங்கைக்கு வருகை தந்த187 ஆவது ஆண்டு நிறைவு வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் சேகரக்குரு ஜெயக்குமாரி இரட்ணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறைப் பங்குத்தந்தை அருட்திரு. இருதயதாஸ் அடிகளார் இவ் வைபவத்தில் சிறப்புரையாற்றுவார்.

(ம-173)

## மத்தியகல்லூரிலியோகழகத்திற்கு சர்வதேச தரச் சின்னங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ் மத்திய கல்லூரியின் லியோ கழகத்துக்குச் சர்வதேச ரீதிபாக வழங்கப்படும் லியோ சின்னங்களும், ஆவணங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த 8 வருடங்களாகப் பாடசாலை லியோக் கழகங்களுக்கு அரிமாக் கழகத்தின் விதிமுறைகளுக்கு மாறாக பிளாஸ்ரிக்கிலான சின்னங்களே வழங்கப்பட்டு வந்ததாகவும் —

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டதை அடுத்து மாவட்ட ஆணையாளர் லயன் உபாலி சமரசிங்க, மாவட்ட இணைப்பாளர் லயன் கே.வி. முத்துக்குமாரசுவாமி, மாவட்ட லியோத் தலைவர் லயன் சி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் உதவியால் ஐம்பது லியோக்களுக்குரிய சர்வதேச ரீதியில் வழங்கப்படும் சின்னங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்—

கல்லூரி அதிபர் க. இராசதுரை தெரிவித்தார்.

புதிய லியோக்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளதாகவும் —

அவர் தெரிவித்தார். (ம-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 27

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சன சமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 7 பேர் பங்கு பற்றும் 6 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ம-86)

## தெய்வீக உரை

யாழ்ப்பாணம், ஜூன் 27

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆனி உத்தர விழாவையெட்டி, நாளை வியாழக்கிழமை காலை உற்சவத்தின் பின்னர், கோவில் மண்டபத்தில் வி. தெய்வேந்திர ஐயர் 'பிச்சுத் தரும் பெருமான்' என்ற பொருளில் உரை நிகழ்த்துவார்.

அதனையடுத்து பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவின் சொற்பொழிவும் இடம்பெற உள்ளது. (ஒ)

## கைதடியில் விவசாய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஒருவருட கால இடைவெளிக்குப் பின்னர் கைதடியில் விவசாயச்செய்கைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் 25 ஏக்கர் விவசாய நிலம் கமநல சேவைகள் திணைக்களத்தினால் டிரக்டர் மூலம் உழுது பண்படுத்தப்பட்டுள்ளது. (க-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி நல்லதம்பி பாக்கியலட்சுமி

மலர்வு: 18-06-1926

உதிர்வு: 19-06-2000

என் தாயே எங்கே மறைந்தாயோ?
பொங்கும் அன்பு வெள்ளம் வற்றிப்போயிற்றோ?
ஆண்டு ஒன்றல்ல ஆயிரம் தான் சென்றாலும்
எனது துயரம் தீராது!
எழுந்து ஓடி வாராயோ?

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் நாளை (28-06-2001) வியாழக்கிழமை வதிரி, கரவெட்டியில் உள்ள பரமானந்த ஆச்சிரமத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரிவால் ஏங்கும்:
**வளர்ப்பு மகன்**

க. துரைராசா,
சீனன் தோட்டம்,
வல்வெட்டி.

குறிப்பு: போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

(89482)



தென் அமெரிக்க நாடான பெருவில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூமியதிர்ச்சியால், கட்டடங்கள் தகர்ந்து வீழ்ந்துள்ள காட்சி. இந்தப் பூமியதிர்ச்சியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 97 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 53 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# அமைதி குறித்து அமெரிக்காவில் பேச்சு; மேற்குக் கரையிலோ வன்முறை வெடிப்பு!

காஸா,ஜூன்27

**மேற்காசியாவில் சமாதானத்தை நிலைநிறுத்த அமெரிக்காவில் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே சமயம், மேற்குக்கரைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மீண்டும் வன்முறைகள் வெடித்துள்ளன.**

மேற்குக்கரை நகரான தெ.்.ரானில் உள்ள யூதக் குடியேற்றங்கள் மீது நேற்று முன்தினம் பலஸ்தீனத் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உடனடியாக விவரங்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஆனால், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் 'பதாய்' அமைப்பின் உயர்மட்டத் தலைவர் ஒருவரை கடந்த 24ஆம் திகதி இஸ்ரேலியர்கள் கொன்றதுக்குப் பதிலடியாகவே, யூதக் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்தியதாகப் பலஸ்தீனத் தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி முதல் மேற்குக் கரைப்பகுதியில் இருதரப்பு யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர், எட்டு பலஸ்தீனர்களும், ஆறு இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேசமயம்,

மேற்குக்கரைப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இடம்பெற்ற இஸ்ரேலிய, பலஸ்தீன வன்முறை மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக, யுத்தநிறுத்தத்தை நீடிப்பது குறித்து இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்கா சென்று பேச்சு நடத்திவருகிறார். (ஒ)

### உலக அரங்கில்

## திருமாவளவன் விடுதலை

சென்னை, ஜூன்27

தமிழகப் பொலீஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் தலைவர் திருமாவளவன் மற்றும் 250 ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் பொருளாளர் பாண்டி கொலை செய்யப்பட்டது தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடதத் திட்டமிட்டிருந்தபோது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஒ)

வன்முறையில் ஈடுபடும் நோக்கோடு

# இந்தியாவுக்குள் நுழைவதற்கு காத்திருக்கும் தீவிரவாதிகள்

புதுடில்லி,ஜூன்27

வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்தோடு, சுமார் 3 ஆயிரம் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழையக் காத்திருக்கின்றனர்.

இவ்வாறு இந்திய இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் மோகன் பண்டாரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள 123 முகாம்களில் இந்தத் தீவிரவாதிகள் தற்போது தங்கியுள்ளதாகவும் -

இவர்கள் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் நுழைந்தால், அமைதி குலைந்து நிலைமை மேலும் மோசமாகும் என்றும் -

மேஜர் ஜெனரல் மோகன் பண்டாரி மேலும் தெரிவித்தார். (ஒ)

# யுத்தநிறுத்தத்தை எதிர்த்து மஸிடோனியாவில் ஆர்ப்பாட்டம்

ஸ்கொப்ஜே,ஜூன்27

அல்பேனியத் தீவிரவாதிகளுடன் மஸிடோனிய அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டதை எதிர்த்து மஸிடோனிய நாடாளுமன்றத்தின் எதிரில் அந்த நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நாட்டின் நலனையும், கௌரவத்தையும் சீர்குலைத்த ஜனாதிபதி பொரிஸ் டிரஜ் கொங்ஸ்கி உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அல்பேனியர்கள் பெருமளவில் வாழும் மஸிடோனிய எல்லைக் கிராமங்களை அல்பேனிய நகரான கொசோவாவுடன் இணைக்கப் போராடும் அல்பேனியத் தீவிரவாதிகளுக்கும் மஸிடோனியப் படைகளுக்கும் இடையே நிகழ்ந்த யுத்தம், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கைகள் வகுப்புப் பிரிவின் உயர் அதிகாரி ஜேவியர் சொலனாவின் மத்தியஸ்தத்தில் நிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஒ)



தென் அமெரிக்க நாடான உருகுவேயில் மணிக்கு 120 கிலோ மீற்றர்கள் வேகத்தில் காற்று வீசி வருகிறது. கடற்கரை நகரான புனிடாடெல் எஸ்றேயில் கடும் காற்று, கடல் நுரையை வீதியில் குவித்திருப்பதையும், நுரையின் ஊடாக வாகனங்கள் செல்வதையும் படத்தில் காணலாம்.

# ஆசியர் - வெள்ளையர் இடையே பிரிட்டிஷ் நகரில் இனக்கலவரம்!

## கடைகள், வாகனங்கள் தீக்கிரை!!

லண்டன்,ஜூன்27

பிரிட்டனின் போன்லி நகரில் வெள்ளையர்களுக்கும் ஆசிய இனத்தவர்களுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இனமோதல்கள் மூண்டன.

ஆசிய நாடொன்றிலிருந்து சென்று பிரிட்டனில் குடியுரிமை பெற்ற ஒருவருக்குச் சொந்தமான கடை ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதாகவும் -

அந்தச் சம்பவத்தையடுத்தே அப்பகுதியில் இனமோதல்கள் வெடித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

ஆசிய இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கும்பல் ஒன்று, வெள்ளையர்களுக்குச் சொந்தமான கடைகளின் மீது பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து நிலைமை மேலும் மோசமாகியதாகவும் -

வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் வாகனங்களுக்கும், இரண்டு கட்டடங்களுக்கும் தீ வைத்ததாகவும்- கூறப்படுகிறது.

எனினும் கலவரம் அடக்கும் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து திங்கட்கிழமை முதல் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

வன்முறைகளைக் கட்டுப்படுத்த ஹெலிகளையும் பயன்படுத்திய பொலீஸார் இனக்கலவரம் தொடர்பாகச் சிலரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்த மாத ஆரம்பத்தில் பிரிட்டனின் துறைமுக நகர் ஒன்றில் ஆசிய இனத்தவருக்கும், வெள்ளையர்களுக்கும் இடையே இனக்கலவரம் ஏற்பட்டது நினைவிருக்கலாம். (ஒ-4)

# அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் தெற்கு ஈராக் மீது கடும் தாக்குதல்!

வாஷிங்ரன்,ஜூன்27

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள விமான் எதிர்ப்புப் பீரங்கித் தளங்கள் மீது நேற்று முன்தினம் அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டன.

'நேட்டோ' படைகள் மற்றும் அவற்றின் விமானப் படை விமானங்கள் ஆகியவற்றின் மீது ஈராக் விடுத்துள்ள அச்சுறுத்தல்களை அடுத்தே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

அச்சுறுத்தல் போக்கை ஈராக் கைவிடுமானால் இவ்வாறான விமானத் தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்றும் -

அமெரிக்க மத்திய ஆணையகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கின் 'ரேடார்' தளம் ஒன்றின் மீதும் 'நேட்டோ' படை விமானங்கள் அண்மையில் தாக்குதல் நடத்தியதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வளைகுடாப் போரையடுத்து ஈராக், விமானப் பறப்பில் ஈடுபட ஐ.நா.தடைவிதித்ததுடன், அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுப்படை விமானங்கள் அந்தத் தடையை கண்காணித்து வருவது தெரிந்ததே. (ஒ)

# 196 இந்திய மீனவரை விடுவிக்க பாகிஸ்தானிய இராணுவ அரசு முடிவு

இஸ்லாமாபாத்,ஜூன்27

பாகிஸ்தானியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 196 இந்திய மீனவர்களையும் அவர்களது 32 படகுகளையும் விடுதலை செயய பாகிஸ்தான் அரசு தீர்மானித்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையில், எந்தவித நிர்ப்பந்தங்களும் இல்லாமல் தாம் இந்த முடிவை எடுத்ததாக பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சு தெரிவித்தது.

கடந்த 7ஆம் திகதி தனது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 157 மீனவர்களையும், 25 படகுகளையும் பாகிஸ்தான் விடுவித்திருந்தது.

அடுத்த மாதம் இந்தியப் பிரதமருடன் பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் நடத்தவுள்ள இருதரப்புப் பேச்சில், ஒரு சுமுக நிலையைப் பேணும் நடவடிக்கையாக மீனவர்களை விடுதலை செய்வது அமையும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (ஒ)

# இத்தாலியக் கடலில் தத்தளித்த 200 பேர் தடுப்புக் காவலில்

ரோம், ஜூன்27

இத்தாலியக் கடற்கரை நகர் ஒன்றில், சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் 200 பேரைத் தாம் தடுத்து வைத்துள்ளதாக இத்தாலிய குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கி நாட்டுக் கொடியோடு கப்பல் ஒன்று இத்தாலிக் கரையோரத்தை அடுத்துள்ள சர்வதேசக் கடற்பரப்பில் தத்தளித்ததாகவும்-

அதில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் ஆள்கள் ஏற்றப்பட்டிருந்ததாகவும்-

அதனால் இத்தாலியக் கரையோரக் காவற்படையினர் அந்தக் கப்பலை கரைக்கு இழுத்து வந்ததாகவும்- கூறப்படுகிறது.

கப்பலில் இருந்த 200 பேரும் தற்போது இத்தாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-4)

# பின்லேடனின் தாக்குதல் குறித்து அமெரிக்கா முன்னெச்சரிக்கை!

வாஷிங்ரன்,ஜூன்27

சர்வதேச இஸ்லாமியத் தீவிரவாதியான ஒசாமா பின்லேடன், உலகில் அமெரிக்க, இஸ்ரேலிய கேந்திர நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியானதையடுத்து சவுதி அரேபியா, கட்டார் உட்பட இஸ்லாமிய நாடுகளில் உள்ள தனது குடிமக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிவுறுத்தல் அந்தந்த நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மூலமாக விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், வளைகுடாப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள தன்து படைகளையும் அமெரிக்கா தயார் நிலையில் வைத்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கர்கள் கூடியளவு வெளியே செல்வதைத் தவிர்க்கும்படியும் -

அறிமுகமில்லாத இடங்களில் இருந்துவரும் தபாற் பொதிகள் குறித்து அவதானமாக இருக்கும்படியும் -

அமெரிக்கத் தூதரகங்களின் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வாகனங்கள் குறித்தும் அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ள அந்த அதிகாரிகள், இந்த எச்சரிக்கை இஸ்லாமிய நாடுகளில் உள்ள அமெரிக்கர்களுக்கு மட்டுமன்றி, உலகளவில் உள்ள அமெரிக்கர்களுக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, பஹ்ரெய்னிலுள்ள அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஜோர்தானில் அமெரிக்கக் கடற்படையினர் மேற்கொண்டிருந்த போர் ஒத்திகை இடைநிறுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தான் பகுதியில் ரகசிய மறைவிடம் ஒன்றில் ஒசாமா பினலேடனைச் சந்தித்த அரபு தொலைக்காட்சி ஒன்றின் செய்தியாளர் இரு வாரங்களில் அமெரிக்க, இஸ்ரேல் நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்த பின்லேடன் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்ததையடுத்தே அமெரிக்கா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. (ஒ)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# கூட்டுறவு விழா

**30-06-2001**

கூட்டுறவாளர்

**திரு. சின்னத்தம்பி சிவமகாராசா (நா.உ.)**

அவர்களின்

சேவைநலன் பாராட்டு விழாவும்

**கூட்டுறவுத் தீபம் சிறப்பு மலர் வெளியீடும்.**

**01-07-2001**

கூட்டுறவுப் பெரியார்கள்
சங்கக் கூட்டுறவாளர்கள்
சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள்

# கௌரவிப்பு விழா

அன்பர்கள், ஆதரவாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் வந்து கலந்து மகிழ்ந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்,*
*தெல்லிப்பழை.*
- விழாச் சபையினர்.

(C/17236)

## யாழ்.பல்கலைக்கழக 13 மாணவர்கள் எழுதிய

# "மண்ணின் மலர்கள்"

*சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா*

**காலம்**:- இன்று (27.06.01) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி
**இடம்** :- கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.

அறிஞர், ஆர்வலர் அனைவரையும்
**அன்புடன் அழைக்கின்றோம்.**

தமிழ் மன்றம்
யாழ்.பல்கலைக்கழகம்.

(89490)

## கொடிகாமம், கச்சாய் புனித இராயப்பர் ஆலயத் திருவிழா

நவநாள்கள்: 26,27-06-2001 பி.ப.4மணி
நற்கருணை விழா: 28-06-2001 பி.ப.4.30 மணி
திருவிழாத் திருப்பலி: - 29-06-2001 காலை 8.30 மணி

மேற்குறிப்பிட்ட நேரப்படி திருவிழா நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

*கச்சாய்,*
*கொடிகாமம்.* (89485)
- பங்கு மக்கள் -

## நகைகள் மீட்பு

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் உள்ள வீடொன்றில் புதைத்து விட்டு வந்த நகைகள் கடந்த திங்கட் கிழமை அங்கு சென்ற உரிமையாளரால் மீட்டு வரப்பட்டுள்ளன.

நகர்ப்பகுதியில் உள்ள நகைக் கடை உரிமையாளரான இவர் இடப்பெயர்வின்போது வளவிலிருந்த பதுங்கு குழிக்குள் அவற்றைப் புதைத்துவிட்டு வந்ததாகவும் - திங்களன்று தனது வீட்டுக்கு உதவியாளருடன் சென்ற இவர் புதைத்து வைக்கப்பட்டிருந்த நகைகளை மீட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.(க-117)

## வணிகக் கல்வி

பரீட்சை வழிகாட்டி
கருத்தரங்கு

*இடம்:-*
*நிரு கல்வி நிலையம்*
(கோண்டாவில்)
*காலம் :-* 28.06.2001 3.00 p.m.
(ப.நே.)

(89498)

## ராஜா யாழ்ப்பாணம்

9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)

(C/17096)

## லஷ்சுமி இணுவில்.

விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்

கள்ளழகர்

(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள்
நிறைந்த படம்.
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (ப.நே.)
(இரண்டாவது கடைசி வாரம்)

(89499)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், மீனா
நடித்த

சேதுபதி IPS

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.30 மணிக்கு

(89487)

உ
தில்லையம்பதியாள் துணை

## தில்லையம்பதியில் நாளை

# ஆனி உத்தர ஆருத்ரா தரிசனம்



**கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் ஆனி உத்தர ஆருத்ர ஆருத்ரா தரிசனம் நாளை 28.06.2001 வியாழக் கிழமை அதிகாலை 4.00மணிக்கு ஸ்ரீ நடராசப் பெருமானுக்கும், ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் ஆனி உத்தர கலச அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனையும் , தெருவீதியுலா வருதலும் நடைபெறும்.**

மங்கள இசை: இணுவையூர் சாமிநாதன் குழுவினர், என்.ஆர்.கோவிந்தசாமியின் புதல்வர்கள்.
விழா உபயம்
கந்தையா உதயகுமார் (ஜேர்மனி)
ஸ்ரீ சிவகாமி தொலைத்தொடர்பகம்-070-212841

திருக்கோயில்
பரிபாலன சபையினர்.

# நன்றியுடன் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

அரியாலை மேற்கு வெட்டுக்குளம்
அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய புனரமைப்பு
திருப்பணி வேலைகளுக்கு ரூபா பத்து இலட்சத்தை ஒதுக்கீடு
செய்தமைக்கு
வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் அமுலாக்கல்,
இந்து கலாசார அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் நாயகமுமான
மாண்புமிகு கௌரவ அமைச்சர்



**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



**கௌரவ க.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்)
(யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும்
நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் J.P.U.M)

அவர்களையும்



**உயர்திரு.க.கிங்ஸ்லி கணேசன் J.P.**
(யாழ்.மாநகராட்சிமன்ற உறுப்பினர்)

அவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்தி மென் மேலும் அம்பிகைக்குத் தாங்கள் பற்பல உதவிகள் புரிவதற்கு அம்பிகை அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*
(89494)

நன்றியுடன்
க.வே.சிவகுமாரன்
(போஷகர், வெட்டுக்குளம்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை)

## விஞ்ஞானபீட மாணவ ஒன்றியத்தினால்

**26.06.2001 இல் நடத்தப்பட்ட**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | - 09087 |
| இரண்டாம் பரிசு | - 07263 |
| மூன்றாம் பரிசு | - 06013 |

*ஆறுதல் பரிசுகள்:*
03053, 00098, 03220, 08006, 03281
11197, 03055, 11272, 00116, 01029

பரிசுக்குரியவர்கள் பற்றுச்சீட்டுடன் 03.07.2001 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய அலுவலகத்துக்குச் சமுகம் தந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
யாழ்.பல்கலைக்கழகம்

(89493)

# துயர் பகிர்கின்றோம்

யாழ்.மாவட்ட செயலக உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை
காங்கேசன்துறை களஞ்சியப் பொறுப்பாளர்
**திரு.வேல்மாறன்** அவர்களின் அன்புத் தந்தையாரும்
முன்னாள் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வன்னி இணைப்பாளருமாகிய

## பொன்.சபாபதி

அவர்களின் திடீர்மறைவையொட்டி ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- யாழ்.மாவட்ட பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கங்களின் சாரதிகள்.

(89492)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் தங்கரத்தினம்

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் தங்கரத்தினம் அவர்கள் நேற்று (26.06.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்குக் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் சுசிலாதேவி (ஜேர்மனி), தேவராஜா (ஊரெழு), சாந்தினிதேவி (சுவிஸ்), ரஞ்சினிதேவி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயதேவி (ஊரெழு), திருலோகசிங்கம் (சுவிஸ்), ஸ்ரீபவன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2001) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரெழு - பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*ஊரெழு கிழக்கு,*
*சுன்னாகம்.* (89489)

தகவல்:
நா.தேவராஜா
(தேவன் - மகன்)

## வேலுப்பிள்ளை சண்முகநாதன்

கல்வியங்காட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகநாதன்(அருளம்பலம் - தேங்காய் எண்ணெய் மில் உரிமையாளர்) நேற்று (26.06.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*நல்லூர்.* (89496)

தகவல்:
ஆனந்தக்குமார் (மகன்)

# மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் நேற்று அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

மண்டைதீவுப் பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த 50 மீனவர்கள் கொண்ட குழு ஒன்று வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியது.

ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளர் என்.மதனராசாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மீள் குடியமர்வு, கடற்றொழில் செய்தல், போக்குவரத்து போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடற்றொழிலை இலகுவாக மேற்கொள்ளவும் -

மண்டைதீவு மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதற்கு உள்ள கஷ்டங்களை நீக்கவும் -

சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி கூறினார்.

கடற்றொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்கும் திட்டங்களை மேற்கொள்வதற்காக மண்டைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு அமைச்சர் ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். (க-3)

## குருநகரில் சிரமதானம்

அரியாலை,ஜூன்27

யாழ்.பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அபிவிருத்தித் தொண்டர்கள் அண்மையில் குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலயம், யாழ்.மரியன்னை ஆலயம் போன்ற ஆலயச் சுற்றாடல் பகுதிகளை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

(க-17)

# மருதானை வல்லுறவுச் சம்பவம்: பல்கலை மாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

மருதானையில் தமிழ்ப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

கொழும்பு மருதானைப் பகுதியில் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடியில் வைத்து இளம் தமிழ்ப்பெண் ஒருவர் சந்திரிகா அரசின் காவல் துறையைச் சேர்ந்த சிங்களக் காடையர்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவத்தை எமது மாணவர் சமூகம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. இவ்வாறான காடைத்தனமான சம்பவங்கள் சந்திரிகா அரசின் கூலிப்படைகளால் நிகழ்த்தப்படுவது இது முதற் தடவையல்ல. சந்திரிகா ஆட்சிப் பீடமேறிய பின்னர் யாழ்.குடாநாட்டிலும் பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

அதுவே இன்றும் இவ்வாறான சம்பவங்கள் தொடரக் காரணமாகிறது. இவ்வாறு தொடரும் சம்பவங்களே தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாக்க ஆயுதமேந்த வேண்டும் என்ற தேவைப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றன. இது விடயத்தில் அரசு உரிய நடவடிக்கைகளைப் பாரபட்சமின்றி எடுக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது - என்றுள்ளது. (உ-3)

## அரசைக் கவிழ்க்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் -

அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதற்கான - பெரிய அளவிலான - வேலைத் திட்டம் ஒன்றைத் தயார்படுத்தி செயற்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கான பொறுப்பு ஐந்து சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்கள் மகிந்த ராஜபக்ஷ, அலவி மௌலானா, ஏ.எச்.எம்.பௌசி, அனுருத்த ரத்வத்தை, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரே இப்பொறுப்பை ஏற்றுள்ளனர்.

ஐ.தே.கட்சியின் பிரசாரத்தை முறியடிக்கும் விதத்தில் ஆர்ப்பாட்டங்கள், பிரசாரக் கூட்டங்கள் மற்றும் எழுச்சி நிகழ்வுகளை நடத்துவது என்பனவும் இந்த வேலைத் திட்டத்தில் உள்ளடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

பிரசார நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது ஒருபுறம் நடக்க -

எதிர்த்தரப்பில் நிற்கும் எம்.பிக்களை அரசு தரப்புக்கு இழுப்பது, முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களை அரசுக்கு ஆதரவாக வளைத்துப் போடுவது ஆகிய நடவடிக்கைகளையும் இக்குழு வழிநடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-3-9)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரே தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் -

அதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான தானே தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் என்றும் -

தேசிய ஐக்கிய முன்னணியின் கூட்டத்தைக் கூட்டும் அதிகாரம் தமக்கே உள்ளது என்றும் -

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதியை தேர்தல் ஆணையாளருக்கும் அவர் அனுப்பியுள்ளார்.

(உ-3)


யாழ்.பல்கலைக்கழகம் வெளிவாரி
G.A.Q., 1st in Com.
இவற்றுக்குரிய பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
1st in Com. புதிய பிரிவு ஆரம்பம்:-
30.06.2001 சனி (காலை 9 மணி)
புதிய உயர் கல்லூரி
நிர்வாகி
S.அருள்நங்கை. ஆரியகுளம் சந்தி, யாழ். (89436)

இதோ
கணனி மூலம் வீடியோ மிக்சிங்
Adobe Premiere & Cool 3D

பயிற்சி வகுப்புக்கள் மற்றும்
Adobe Photoshop
CorelDRAW வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன
பலரின் வேண்டுகோளுக்கிணங்க மாலை (6-8)நேர வகுப்பாகவும் நடைபெறும். மேலதிக விபரங்களிற்கு
Director
ஆரம்பம் 28,29,30-06-2001
STP Computer World (Pvt) Ltd.
54A, Palaly Road, kantharmadamJaffna
E.mail:stpedu@hotmall.com T.P:2674

சுடர் ஒளி
01-07-2001
லண்டனில் அரியாலை – மன்னார் கோஷ்டி மோதல்!
முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மூவர் பதவி இழக்கும் ஆபத்து
கண்கொத்திப் பாம்புகளாக குடாநாட்டில் பிஸ்டல் குழுக்கள்
நீதியா சட்டமா? போட்டி முடிந்தது; சட்டம் வென்றது
புலிவேட்டைப் போர்வையில் கிழக்குப் பல்கலை சல்லடை
குடாநாட்டில் பகிடிக்காரர்களைப் பிடிக்கும் போர்வையில் பணம் பறிப்பா?
ஆஞ்சநேயரை வழிபட்டு சிவத்தை அடையலாம் ~ சமயச் சர்ச்சை
மற்றும் மருத்துவக் கேள்வி பதில்கள், பித்தன் பதில்கள், ஆந்தையாரின் 'க்ரைம் டயறி', முத்தமிடும் ரோஜா இதழ்கள் தொடர்கதை, சினிமா, விளையாட்டு.
வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே ஒரு பத்திரிகை!
(C/17238)

கணக்கீடு
A/L 2003
தனிவியாபார முடிவுக்கணக்கு
நாளை 4.00 p.m.
S. தவா
B.Com.(Hons) (Acc.Spl)
SHAMROCK
(89495) Temple Rd, Jaffna

புதிய வீடியோ CD வெளியீடு
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
☆ சித்திரம்
பிரதிகள் உடன் பெறலாம்
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி,
(89500) கோண்டாவில்.

எமது ஓடியோ CD வெளியீடுகள்
☆ வேதம்
☆ ஒரு பொய் சொல் கண்ணால்
☆ சிறகுகள் இல்லை
☆ தில்
☆ கலகலப்பு
☆ A.R.ரகுமானின் (Remix)
பதிவு செய்யப்பட்ட CD 300/-
மெலோடியஸ் மியூசிக்
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/17235)

A.V.V
எமது இன்றைய ஓடியோ CD வெளியீடு
தில்

வித்தியாசாகரின் இசையில்
எமது றீமிக்ஸ் 2001 வெளியீடுகள்
01. Gaana
02. Tamil Earth Quake -1
03. Tamil Earth Quake -2
ஐங்கரன் வீடியோ விஷன்
32 ந.ப.நோ.கூ.ச. ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
☆ சித்திரம்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/17242)

இன்றைய ஓடியோ CD வெளியீடு
★ வேகம்
★ பெண் மனசு
ஆங்கிலத் திரைப்பட CDக்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
கட்டணம் - 30/-
மூர்த்தி வீடியோ
(C-17239) மானிப்பாய்.

உங்களுக்காக
IIS இன் மற்றுமோர் கணனிச் சேவை
குடா நாட்டுக் கணனி ஆர்வலர்களுக்கோர் நற்செய்தி!
உங்களுக்கு கணனி பாவிக்கத் தெரிந்தும் வீட்டில் கணனி இல்லையே என்ற குறையா?
உங்கள் கணனித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லையா?
நீங்களே
Type Setting
Printing / Floppy யில் பதித்தல்
Scanning
Internet Accessing
Dictionary/ Encyclopaedia
Computer Games
ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்
கணனியில் பரிச்சயம் இருப்பின் நீங்களாகவே உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து சுய திருப்தி அடையவும் சொந்த விடயங்களை இரகசியமாக பேணவும் ஒரு வாய்ப்பு
ஆரம்பம்: 1.7.2001
மணித்தியாலத்திற்கு ரூபாய் 40/= மட்டுமே
INSTITUTE OF INFORMATICS STUDIES
EXTERNAL SERVICES UNIT
100, Clock Tower, Road, Jaffna.
T.P. No: 021-2831 E-Mail: iis@sltnet.lk

யாழ்.பல்கலைக்கழக
நுண்கலைத்துறையும் கலைவட்டமும்
இணைந்து வழங்கும்
முழுசம் நிகழ்வுத் தொடர்-4
தஞ்சாவூர்

கண்ணாடி ஓவியங்களின் காட்சி
ஜூன் 28 மாலை 2.00 மணி – 4.00 மணிவரை.
ஜூன் 29,30 காலை 10.00 மணி – 4.00 மணிவரை.
இடம் : நூலக கேட்போர் கூடம், யாழ்.பல்கலைக்கழகம்.
பிரவேசம் 10/-
சிறப்புற வாழ்த்துவோர்:-
(C/17232)
(I) YOSO FANCY PALACE
No. 240, SIR PON. RAMANATHAN ROAD, THIRUNELVELLY.
(89447)
(II) SANTHIYA
MULTI COURTYARD
No.02, GRAND BAZAAR, JAFFNA.
MAIN STREET, PANDATHERIPPU.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.